பக்கங்கள்: பத்து

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

விலை ரூபா.7.00

ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில்
முதலாம் தரத் தொழிற்சாலையில்
இருந்து தயாரிக்கப்பட்டது.

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | மாசி 22 | வெள்ளிக்கிழமை | (05-03-2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 77

## கிழக்கு மாகாண நிலைமை குறித்து

# கண்காணிப்புக்குழுத் தலைவர் தமிழ்ச்செல்வனுடன் சந்திப்பு

(கிளிநொச்சி)

**கிழக்கு மாகாணத்தில் தற்போது ஏற்பட்டுள்ள நிலைமைகள் தொடர்பாகப் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவர் டொன்பியூறு ஹெவ்டே விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வனைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.**

மட்டு - அம்பாறை மாவட்டத் தளபதி கேணல் கருணாவுக்கும், விடுதலைப் புலிகளின் தலைமைக்கும் இடையே ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படும் அரசியல் நெருக்கடி குறித்து இக்கலந்துரையாடல் இடம்பெற்றதாகத் தெரியவருகிறது.

நேற்றுக்காலை 11.00 மணியளவில் உலங்கு வானூர்திமூலம் கிளிநொச்சி விளையாட்டு மைதானத்தில் வந்திறங்கிய கண்காணிப்புக் குழுத் தலைவர் டொன்பியூறு ஹெவ்டே மற்றும் துணைத் தலைவர் ஹக்ரப் ஆகியோர் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன், கிழக்கு மாகாண அரசியல் துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் ஆகியோரைச் சந்தித்துக் கலந்துரையாடினர். இச்சந்திப்பில் சமாதான செயலகத்தின் இயக்குநர் புலித்தேவனும் கலந்துகொண்டார். இக்கலந்துரையாடல் மிகவும் சுமுகமான சூழ்நிலையில் இடம்பெற்றதுடன், அதில் வடக்கு, கிழக்கில் இடம் பெறவிருந்த தேர்தல் தொடர்பான விடயங்கள் மற்றும் கிழக்கு மாகாணத்தின் தற்போதைய நிலை பரங்கள் என்பன தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது.

(10ஆம் பக்கம் பார்க்க)



## கிழக்கு மாகாண நிலைபரம்

# பிரதமர் ரணில் தலைமையில் அவசர மாநாடு கூடியது

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி நிலை தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவசரமாநாடு ஒன்றை நடத்தினார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்த அவசர மாநாட்டில் நோர்வேத் தூதுவர் ஜோன் வெஸ்போர்க், யுத்த

(10ஆம் பக்கம் பார்க்க)

# கட்டுப்பாடற்ற பகுதி மக்கள் வாக்களிக்க தேவையான வசதிகளைச் செய்யவேண்டும்

## யாழ். ஆயர் ஜனாதிபதிக்குக் கடிதம்

(யாழ்ப்பாணம்)

அரச கட்டுப்பாடு இல்லாத பகுதிகளில் வாழும் மக்கள் தமது ஜனநாயக உரிமையின்படி பொதுத் தேர்தலில் பங்குபற்ற தேவையான வசதிகளைச் செய்துகொடுக்க வேண்டும் என மிக வினயமாகக் கேட்டுக்கொள்கின்றேன். இல்லாவிடில் அரச கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளில் வாழும் ஏராளமான மக்களின் வாக்களிக்கும் உரிமை

(10ஆம் பக்கம் பார்க்க)

# ஐ.தே.மு. அரசு புலிகளுடன் இணைந்து நாட்டு மக்களை ஏமாற்றிவிட்டது

## பிரசாரக் கூட்டத்தில் ஜனாதிபதி உரை

(கொழும்பு)

யுத்தம் இல்லாத அமைதிப் பேச்சுவார்த்தைகள் மூலம் இனப் பிரச்சினைக்குத் தீர்வுக்காண ஏப்ரல் மாதம் 2ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தல் மூலம் மக்களுக்கு ஒரு சந்தர்ப்பத்தை அளித்துள்ளோம். நாட்டு மக்கள் அனைவரும் சிந்தித்து நிலையான ஸதிரத்தன்மையுடைய அரசொன்றை அமைப்பதற்கு ஐக்கிய மக்கள் சுதந்

(10ஆம் பக்கம் பார்க்க)

# ஐ.தே.முன்னணி அரசாங்கத்தை மக்கள் நிராகரிக்க வேண்டும்

## மங்கள சமரவீர முழக்கம்

(கொழும்பு)

இலங்கை அரசியல் வரலாற்றில் ஐக்கிய தேசிய முன்னணி அரசின் ஆட்சிக்காலமே கறைபடிந்த ஆட்சிக்காலம் என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பேச்சாளர் மங்கள சமரவீர குற்றஞ்சாட்டியுள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், கடந்த இரண்டு ஆண்டுகளாக நாட்டை

(10ஆம் பக்கம் பார்க்க)



உணர்ச்சி பூர்வமான வார்த்தைகளுக்கு எடுபடாமல்
கபடத்தனமான போலி ஒற்றுமைகளுக்கு மயங்காமல்
அச்சுறுத்தும் ஆயுதங்களை எண்ணி மிரளாமல்
வீணைக்கே வாக்களியுங்கள்!!!



X

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி)

(8504)



சமாதானத்தின் எதிரிகளை
தலைகுனிய வைத்திடவும்,
சமாதானத்தை நிலை நிறுத்திடவும்...



X
1

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு க.சுரேஷ் பிரேமச்சந்திரன்

# அரசியல்வாதிகள் நம்பத்தகுந்தவர்களல்லர்

# மக்கள் விழிப்புணர்வு அவசியமானது

## "பவ்ரல்" தலைவர் கிங்ஸிலி ரொட்றிக்கோ

நமது கடந்தகால அனுபவங்களிலிருந்து பார்க்கும் போது நம்முடைய அரசியல்வாதிகள் நம்பத்தகுந்தவர்கள் அல்ல என்பதில் யாருககும் இரண்டுகருத்து இருக்க முடியாது. இவ்வாறு தெரிவித்தார் "நீதியும் சுதந்திரமானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்க"த்தின் தலைவர் *(People Action For Free And Fair Election)* கிஸ்ஸிலி ரொட்றிக்கோ.

"பவ்ரல்" என்று சுருக்கமாக அழைக்கப்படும் இவ்வமைப்பு எதிர்வரும் தேர்தல் நீதி, நேர்மையாக நடாத்தப்படுவதை உறுதி செய்யும் நடவடிக்கைகளில் அதிதீவிரமாகச் செயற்பட்டுக்கொண்டிருக்கிறது. வலம்புரியின் "தேர்தல்களம்" பகுதிக்கு அதன் தலைவர் கிங்ஸிலி ரொட்றிக்கோ வழங்கிய விசேட பேட்டியின் விபரம் வருமாறு.

**★ அநாவசியமானது! என்று வர்ணிக்கப்படும் இத்தேர்தலில் மக்கள் அவசியம் வாக்களிக்க வேண்டியதன் தார்ப்பரியத்தை விளக்குங்கள்?**

ஆமாம்! உண்மையில் இது ஒரு அநாவசியமான தேர்தல்தான். சுயநலவாத அரசியல்வாதிகளின் அராஜகப் போக்கிற்கு இது ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. மக்களையும் தேசத்தையும் மறந்து, தம்மையும், தமது சுகபோக இருப்பையும் முதன்மைப்படுத்துகின்ற அரசியல்வாதிகள் நடத்திய கூத்துக்களின் வெளிப்பாடே இந்தத் தேர்தல். இது மக்கள் மீது திணிக்கப்பட்டிருக்கின்றது என்பதில் எதுவித ஐயப்பாடுமில்லை ஆயினும், இவ் வேளையில் தான் மக்கள் சற்று விழிப்பாகச் செயலாற்ற வேணடும். ஏனெனில் இந்தச் சந்தர்ப்பங்களிற்தான் மக்களின் கைகளுக்கு அதிகாரம் கிடைக்கிறது.

பொதுவாக மக்களே மன்னர்கள். மக்கள் சொல்வதைத்தான் நாம் செய்கிறோம், மக்கள் கேட்கிறார்கள், மக்கள் சொல்கிறார்கள் என்று வாய் கூசாமல் பொய் பேசி மக்களை ஏமாற்றும் அரசியல்வாதிகள் உண்மையாகவே மக்களிடம் மண்டியிடவருவது இந்தத் தேர்தல காலத்தில்தான். ஏமாற்றுக்காரர்களையும், அயோக்கியர்களையும் மக்கள் தூக்கியெறியவேண்டும். அதற்காக நீங்கள் வாக்குச் சாவடிக்குச சென்று வாக்களிக்க வேண்டும். ஏனோ தானோ என்ற மனோநிலை யில் அசட்டையாக இருந்துவிடாதீர்கள்.

நீங்கள் அவசியம் வாக்களிப்புக்குச் செல்லவேண்டும். இல்லையேல் கள்ளவாக்களிப்பு இடம் பெற நீங்களும் வழிசெய்தவராவீர்கள். உங்களுடைய வாக்கை யாரோ பாவிப்பதற்கு நீங்களும் உடந்தையாக இராதீர்கள்.

**★ ஜனநாயக நடைமுறைகளில் பங்குகெடுத்துக் கொள்வதில் இந்த நாட்டைப் பொறுத்தவரையில் மக்களார்வம் எந்த மட்டத்தில் இருக்கிறது?**

## தேர்தல்களம்

உண்மையில் ஜனநாயக நடைமுறை என்பதில் தேர்தல்கால நடைமுறைகளை எடுத்துக் கொண்டால், எப்பாடுபட்டாவது தேர்தலில் வெற்றி பெற்றுவிடவேண்டும் என்பதில் நம்முடைய அரசியல்வாதிகள் கவனமாக இருக்கிறார்கள். தேர்தல் காலத்திலும் சரி அது முடிந்தபிற்பாடும் சரி போட்டியிட்டு வெற்றிபெற்ற எதிராளிகள் சந்தித்துக் கொள்கிறார்கள். கைலாகு கொடுக்கிறார்கள். பாராளுமன்றப் போசன சாலையில் ஒன்றாக அமர்ந்து தேநீர் அருந்திக் கொள்கிறார்கள்.

ஆனால், தேர்தல் காலத்தில் இவர்களுக்காகப் பலர் உயிரை விடுகிறார்கள். அயலவர் நண்பர்களைப்பகைத்துக் கொள்கிறார்கள் இந தப்பகைமை சில வேளைகளில் வாழ் நாள் முழுவதும் தொடர்வதுமுண்டு! இப்படி இவர்களுக்காக விசுவாசமாக உழைத்தவர்களையும், இவர்கள் மீது நம்பிக்கை வைத்து வாக்களித்தவர்களையும் பதவிகிடைத்தவுடன் அரசியல்வாதிகள் மறந்துவிடுகிறார்கள்.

மறந்து போனாலும் பரவாயில்லை மக்களாணையைத் துஷ்பிரயோகம் செய்கிறார்கள். இதனால் தேர்தல் நடைமுறைகள் மீது மக்கள் நம்பிக்கை இழந்து போகிறார்கள்.

இரண்டு வேட்பாளர்கள் மட்டக்களப்புப் பிரதேசத்தில் கொலை செய்யப்பட்டுள்ளார்கள். அதனால் ஏற்பட்ட அச்சம் காரணமாக வேட்பாளர்கள் போட்டியிலிருந்து விலகிப் போகிறார்கள். இவ்வாறான அச்சுறுத்தல்களால் மக்கள் எப்படி ஜனநாயக நடைமுறைகளில் நம்பிக்கை வைக்கமுடியும். கடந்த பொதுத் தேர்தலின் போது வாக்காளர் பலர் கொலை செய்யப்பட்டார்கள் உண்மையில் இதைத் திட்டமிட்டவகையில் வாக்காளரை அச்சுறுத்திப் பொதுமக்கள், ஜனநாயக நடைமுறைகளில் பங்கெடுப்பதற்கு அச்சுறுத்தலை உருவாக்கும் செயலாகவே கருத வேண்டும். ஆயினும் மக்கள் தங்களது வாக்குரிமைப் பலத்தை அராஜக அரசியல்வாதிகளுக்கு உணர்த்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்

**★ தேர்தல் காலத்தில் ஊடகங்களின் பொறுப்புணர்வு பற்றிச் சொல்லுங்கள்**

பொதுவாக இந்நாட்டில் தேர்தல் காலமானாலும் சரி வேறு எந்தக் காலமானாலும் சரி அரச ஊடகங்கள் ஆட்சியிலிருக்கும் அரசாங்கத்தின் சார்பாகவும் ஏனையவை எதிர்க்கட்சிகளின் சார்பாகவும் செயற்படுவதே வழமை. இந்த நிலைமையைப் பொதுமக்கள் நன்கறிவார்கள்.

ஜனநாயகத்தின் வெற்றிக்கு நடு நிலைமையும், நேர்மையும், நம்பகத் தன்மையுமுள்ள ஊடகத்துறையின் செயற்பாடுகள் பெரிதும் பங்களிக்கும் என்பதை ஊடகவியலாளர்கள் கவனத்தில் கொள்ள வேண்டுமென்பது முக்கியமானது.

அரச ஊடகங்களை தேர்தல் ஆணையாளர் தமது அதிகாரங்களைப் பயன்படுத்தி இக்கால கட்டத்தில் நெறிப்படுத்துதல் அவசியமானதென்று கோரிக்கைகள் விடப்பட்டிருக்கிறது. அவர் இதனைச செய்வார் என்று நம்புகின்றோம்.

**★ உங்களது பவ்ரல் அமைப்பு இதுவரையில் தேர்தல் தொடர்பாக எடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றி...**

இந்தத் தேர்தல் நீதி நேர்மையான விதத்தில் நடத்தப்படுவதை உறுதி செய்யும் பொருட்டும் வாக்காளர்கள் அச்சமின்றித் தமது வாக்குகளைச் செலுத்தும் பொருட்டம் தொடர்புச் சாதனங்களில் நாம் தொடர்ச்சியாக விழிப்புணர்வுக் கருத்துக்களை வெளியிடுவோம்.

இதற்கும் அப்பால் ஒவ்வொரு வாக்களிப்பு நிலையத்திலும் தலா இருவர் வீதம் நாடு முழுவதற்கும் கண்காணிப்பாளர்களை நியமிப்போம். தற்பொழுது சுமார் 360 வாகனங்களைத் தேர்தல் பணிகளுக்காக தயார் நிலையில் வைத்திருக்கிறோம். மேலும் பல வாகனங்களை நாம் ஒழுங்கு செய்யவுள்ளோம்.

சுமார் 20 ஆயிரம் பணியாளர்கள் நாடு முழுவதிலும் பணியாற்றவுள்ளனர். இவை ஒருபுறம் இருக்க ஐக்கிய அமெரிக்கா, பிறேசில், கனடா, அயர்லாந்து, கென்யா, பிலிப்பைன்ஸ், ஜப்பான், கானா, பர்மா போன்ற நாடுகளில் இருந்தும் தேர்தல் கண்காணிப்பாளர்கள் எம்முடன் வந்து இணைந்து செயலாற்றத் தொடங்கியிருக்கின்றார்கள்.

இந்நாட்டு அரசியல்வாதிகளிடமும் அரசியல் கட்சிகளிடமும் அதன் தலைவர்களிடமும் நாம் வினயமாகக் கேட்டுக் கொள்வது யாதெனில், மக்கள் தமது ஜனநாயக உரிமையைப் பயன்படுத்துவதில் எவ்விதத்திலும் முட்டுக்கட்டையாக இராதீர்கள். வன்முறைகளையும், அராஜகத்தையும் கைவிட்டு இரத்தமும் பீதியும் அற்ற அமைதியான தேர்தலுக்கு மனப்பூர்வமாகப் பங்களிப்புச் செய்யுங்கள் என்று கேட்டுக்கொள்கின்றோம் எனும் வேண்டுகோளோடு செவ்வியை முடித்தார் ரொட்றிக்கோ.

**தொகுப்பு**
**யேசு**


காரைநகர் - மணற்காடு

**அருள்மிகுதேவி கும்பநாயகி முத்துமாரி அம்பாள்**

ஆலயம்

***சுபானு வருஷ பிரம்மோற்சவ விஞ்ஞாபனம்***

கிரியாகால நிகழ்வுகள்

06.03.2004 மாசி 23ம் நாள் சனிக்கிழமை
**த்வஜாரோகணம் காலை 11.30 மணி**

17.03.2004 பங்குனி 4ம் நாள் புதன்கிழமை
**வேட்டைத்திருவிழா**

18.03.2004 பங்குனி 5ம் நாள் வியாழக்கிழமை
**பெரிய சப்பறம்**

19.03.2004 பங்குனி 6ம் நாள் வெள்ளிக்கிழமை
**ரதாரோகணம் காலை 10.30 மணி**

20.03.2004 பங்குனி 7ம் நாள் சனிக்கிழமை
**தீர்த்தோற்சவம் - காலை 10.30 மணி**

26.03.2004 பங்குனி 13ம் நாள் வெள்ளிக்கிழமை
**வேள்வி நடைபெறும்**

27.03.2004 பங்குனி 14ம் நாள் சனிக்கிழமை
**பிராயச்சித்த அபிஷேகம் - காலை 9.00 மணிக்கு.**

மகோற்ஷவ குரு
**சிவப்பிரம்மஸ்ரீ நா.ஞானசம்பந்தக்குருக்கள்**
*(தேவஸ்தான பிரதம குரு)*

*(C/7376)*


# சிந்தித்துச் செயல்படுவோம்

# புரிந்துணர்வுடன் புள்ளடியிடுவோம்

அரசியல் என்றாலே, அது சாக்கடை என்றும், போக்கிரிகளின் புகலிடம் என்றும், நாணயமற்றோரின் கூடா ரம் என்றும், பிழைக்கத் தெரியாதவன் போய்த் தஞ்சடையும் இடம் என்றும் பலவாறாக இழிவுபடுத்திக் கூறப்படுவதை நாம் அறியக்கூடிய தாக உள்ளது.

தேர்தல் காலங்களில் வாக்குக் கேட்கவரும் அரசியல்வாதிகள், தாங்களும் மக்களின் இன்பதுன்பங்களிலெல்லாம் பங்குடையவர் போலவும் தேசாபிமானம், மனிதாபிமானம் உடையவர் போலவும் வேடம் தாங்கிப் பாராளுமன்றக் கதிரைகளிற் போய் அமர்வதற்குத் தம்மாலான அத்தனை திறனுடனும் நடிக்கின்றார்கள்.

ஆட்சியைப்பிடிப்பவர்கள் ஆங்காங்கே தம் கழுகுக் கண்களால் நோட்டம் விட்டுச் சமூகத்தில் உயர்ந்தவர்கள் தொழில் துறைவல்லுநர்கள் மற்றும் தமக்கு வேண்டியவர்கள் பலரையும், பதவிகளையும், அற்பசொற்பசலுகைகளையும் கொடுத்து தமது ஆட்சிக்கு முண்டு கொடுக்கச் செய்து ஆளுங்கட்சியாகத்தம் பலத்தைக் கூட்டியதும் ஜனநாயகவழித் தேர்தல் மூலம் பாராளுமன்றம் போய் அங்கு பதவிகளில் இருந்ததும் மனம் போன போக்கிலே சர்வாதிகாரம் நடாத்துவார்கள்.

இந்த ஏமாற்று அரசாட்சியே இலங்கையில் கடந்த பலவருடங்களாக நடைபெற்றுவருகின்றது.அரசியல்வாதிகள் மக்களை வெறும் ஏமாளிகளாகவே எண்ணி, ஏமாற்றும் சந்தர்ப்பவாதிகளாக நடித்து. தம் காரியத்தில் வென்றதும் நீ யாரோ? நான் யாரோ எனப் புறம் காட்டிவிடுகின்றனர்.

இதனை மக்கள் மனதில் நன்கு சிந்தித்துத் தமக்கும் தம் இனத்திற்கும் பிரதேசத்திற்கும் நல்லன செய்பவர்களை நாடித் தேடி அவர்களின் சேவையின் தேவைக்கு வாக்களிக்கவேண்டும்.

இது இலகுவான காரியமல்ல சிறந்த நல்ல மனத்தெளிவு இருந்

## ஸ்ரீமான் பொதுஜனம்
நீர்வை மணி

தாலே மக்கள் இப்படி அணுக முடியும்.

கடந்த காலங்களில் இலங்கை வாழ் தமிழ் மக்கள் அரசியல்வாதிகளால் எப்படி? எப்படி? ஏமாற்றப்பட்டார்கள்- ஏமாற்று அரசியல்வாதிகள் மக்கள்வாழ்வையும் தவறாக வழிப்படுத்தத் தமிழர் எல்லோரையுமே அகதியாக்கிவிட்ட நிலை பரிதாபத்திற்குரியதன்றோ.

இந்நிலைக்கு மூலகாரணமாய் அமைந்தது சிறுபான்மையினராகிய எம் மக்களின் ஒற்றுமைக்குறைவும பதவிமோகமும், அற்பசலுகை ஆசைகளும என்பதை மறைக்கவோ, மறுக்கவோ முடியாது.

எனவே இன்றைய இன்னல் நிலைகளின்று தமிழ் மக்கள் தமிழ்ப்பிரதேசத்தை பாதுகாக்கவும், தமிழ் இந் நாட்டில் தலை நிமிர்ந்து வாழவும் தம்மை அாப்பணிக்கக்கூடியவர்களையே தமிழ மக்கள் இனங்காண வேண்டும.

**எமது இன்றைய தேவை**

இலங்கை ஆட்சியாளர்களின் வகுப்புவாத பேரினவாதக் கொள்கைகளும் பலவருடங்களாகப் பயந்து, பதுங்கி, செய்வதறியாது தறிகெட்டு ஓடி, பொருளழிவு, உயிரழிவு, பண்பாட்டுக் கலாசாரச் சீரழிவுகள் போன்ற பல்வேறு பெருந்துன்பங்களுக்கெல்லாம் முகம் கொடுத்துக் கொண்டு இருக்கும் எமக்கு,

இனியாவது தமிழன் தமிழனாகத் தலை நிமிர்ந்து தன் நிறைவுடன் வாழ வழிகாட்டுபவர்யார்? என்பதை அரசியலில் ஏகோபித்த முடிவுடன் இனங் காணவேண்டிய பெரும் பொறுப்பு இனறைய தேர்தல்களத்தில் தமிழ்ப் பெருமக்கள் எல்லோருக்கும் ஏற்பட்டுள்ளது.

எம் அன்னையை, அன்னை மொழியைத் தாய்நாட்டை, தாய் நாட்டு மக்களை, இம்மககளின் பண்பாடு கலாசார விழுமியங்களை நிலை நிறுத்திச் சிறப்பிக்கக் கூடியவர்களைத் தெரிவு செய்யவதன் மூலம் நாடும் வீடும் என்றும் நலம் பெறச் செய்தவராகலாம். ஓட்டுரிமை அவரவர்க்குரியது ஆயினும் சிந்தித்துச் செயற்படல் காலத்தால் பெருமை சேர்க்கும்.


**பதவி பூர்வ புண்ணியம்**

**இவருக்குப் பாராட்டு!**



**யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் பிரதி அதிபரான**

**லெப்ரினன் தா.நாகரட்ணம்**

**அகில இலங்கை சமாதான நீதிவானாக அண்மையில் யாழ்.மாவட்ட மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.**

**ஈழத்தின் தலைசிறந்த இரசாயனவியல் ஆசானாகவும், முன்னாள் உன்னத விளையாட்டு வீரராகவும் மும்மொழிகளிலும் பாண்டித்தியம் பெற்றவராகவும், விஞ்ஞான பட்டமும் பட்டப்பின் கல்வி டிப்புளோமாதாரியுமான கல்வியியலாளனான இவருக்கு**

**மேலும் மக்களுக்குச் சேவையாற்ற இப்பதவி கிடைத்துள்ளமையையிட்டு மனமகிழ்ந்து பாராட்டி வாழ்த்துகின்றேன்.**

திரு.வீ.ஏ.சிவராசா
அதிபர்
**ஆனந்த வித்தியாலயம் நல்லூர்**

*(8426)*

## இன்று ஒரு தகவல்

# இது ஒரு பிரச்சினை

ஒரு பெரியவர் இருந்தார். அவருக்கு 50 வயது. அவருக்கு வாழ்க்கையில் எந்தக் குறையும் இல்லை. சிறு வயதிலேயே படிப்பு நன்றாக வந்தது. படித்தார் வசதியான குடும்பம். அதனால் பணத்துக்குக் கஷ்டமில்லை. படிப்பு முடிந்ததும் கல்யாணம். மனதுக்குப் பிடித்த மனைவி. தொல்லை யில்லாத குடும்ப வாழ்க்கை.

அவர்களுக்கு ஒரு மகள் பிறந்தாள். மகளையும் நன்கு படிக்க வைத்து வசதியான இடத்தில் திருமணம் செய்து கொடுத்தாகிவிட்டது. பெண்ணின் புகுந்த வீடு மிகவும் நல்ல இடம். மாமனார் மாமியார் உட்பட எல்லோருக்கும் நல்ல குணம். நமது பெரியவர் ஒரு தனியார் நிறுவனத்தில் நல்ல உத்தியோகத்தில் இருக்கிறார். இவருடன் வேலை செய்ப வர்களும் மிக நல்லவர்கள். இப்போதும் தன் மனைவியை அழைத்துக்கொண்டு அடிக்கடி உல்லாசப் பயணமெல்லாம் போகிறார். எல்லா வசதிகளுடனும் வாழ்கிறார். எந்தச் சிக் கலுமில்லை.

இவரது வாழ்க்கையைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீ கள்? இதுபோல் எல்லாம் அமைந்துவிட்டால் நானும் மிக நிம்மதியாக இருப்பேன் என்று கூறுவீர்கள். ஆனால் அந்தப் பெரியவர் நிம்மதியாக இருக்கின்றார் என்றா நினைக்கின் றீரகள். அதுதான் இல்லை. அவர் என்ன சொல்கிறார் தெரி யுமா? " வாழ்க்கையில் நான் நினைத்தது எல்லாமே கிடைத்து விட்டது. எதற்காகவும் நான் கவலைப்பட வேண்டிய அவசியம் இல்லை என்பது உண்மை. ஆனால் எப்போது பார்த்தாலும் எனக்குள்ளே ஒரு சோகம். ஏதோ ஒரு சோகம் இருந்து கொண்டே இருக்கும்.. அது ஏன் என்று எனக்கும் புரியவில்லை " என்கி றார்.

இதே நிலை நம்மிலும் சிலருக்கு இருக்கலாம். " எல்லாம் இருக்கிறது. இருந்தாலும் வாழ்வில் என்னால் நிம்மதியாக இருக்கமுடியவில்லை " என்ற நிலைமை. இது ஒரு மனோதத் துவக் கோளாறு. ஆசைப்பட்ட எல்லாம் கிடைத்துவிட்ட தென்று வையுங்கள். அதன்பின் அதற்காக வாழவேண்டும் எனத் தோன்றும். வாழ்வில் பிரச்சினைகளே இல்லை என்று வையுங்கள். அதுவே ஒரு பிரச்சினை. அதுதான் இது. அதாவது பிரச்சினையே இல்லாமல் இருக்கிற பிரச்சினை.

சோகமோ மகிழ்ச்சியோ எதுவாக இருப்பினும் சரி அடுத் ததாக ஒரு விடயம் உண்டு. அதைக் கவனிக்க வேண்டும் என்று தொடர்ந்து திட்டம் போடுவதிலும் அதற்காக செயற்படுவதி லும் தான் வாழ்க்கைச் சக்கரம் ஓடுகிறது. அடுத்ததாக செயற்படுவதற்கு எதுவும் இல்லாதபோது அந்தச் சக்கரம் நிற்கின்றது. இனிமேல் ஏன் ஓட வேண்டும் என்ற கேள்வி வரும். இது நியாயம் தான். இருந்தாலும் வாழ்க்கை என்பது இன் னும் இருக்கிறது என்று வலியப் போய் சில விடயங்களை நாம் எடுத்துக்கொண்டோமானால் இனி ஏன் ஓடவேண்டும் என்ற கேள்வி அர்த்தமற்றதாகிவிடும்.

ஆனால் எல்லாம் பார்த்தாகிவிட்டது. இனிமேல் என்ன இருக்கிறது வாழ்வில் என்று நீங்கள் ஒரு முடிவுக்கு வந்து விடாதீர்கள். இந்த உலகில் எத்தனையோ இருக்கிறது. நமக்குத் தான் பிரச்சினை இல்லையென்றால் அடுத்தவர்களுக்கு ஏதாவது பிரச்சினை இருக்குமல்லவா. அவ்றறைத் தீரப் பதற்கு உதவலாம். இப்படி ஏதாவது சமூக சேவை செய்வ தெனறு திட்ட மிட்டுவிட்டு யோசிக்க ஆரம்பியுங்கள். உங் களுக்குள்ளே அர்த்த மில்லாமல் இருக்கும் சோகம் ஓடி மறைந்து விடும்.

இதுவரையில் கூறியதெல்லாம் பிரச்சினையே இல்லை என்ற பிரச்சினை உள்ளவர்களுக்கு இப்படியானவர்கள் மிக அபூர்வம். பிரச்சினையில் இருந்து தப்பிக்க வழி கூறுங்கள் என்று கேட்பவர்கள்தான் அதிகம்.

ஒருவர் வந்தார்.இன்னொருவரைப் பார்த்தார். " சார் எனக் குக் கடுமையான பணப்பிரச்சினை. 100 ரூபாய் இருந்தால் தாருங்கள் "என்றார். " நீ யாரென்று எனக்குத் தெரியாது. உனக்குத் தெரிந்த யாரிடமாவது கேள் " என்றார் இவர். அதற்கு அவர் " அவர்களிடம் எல்லாம் ஏற்கனவே வாங்கி யாகிவிட்டது அதுதான் உங்களிடம் வந்தேன் " என்றார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# ஆசிரிய மத்திய நிலையங்களின் புனரமைப்புக்கு உலக வங்கி நிதி

(கொழும்பு)

வடக்கு- கிழக்கு மாகாணத்தில் 6 மாவட்டங்களில் இயங்கிவரும் ஆசிரிய மத்திய நிலையங்கள் உலகவங்கியின் உதவியுடன் புனரமைக் கப்படவுள்ளன.

கல்வி அமைச்சின் ஆசிரியர் கல்வி செயற்திட்டப் பணிப்பாளர் வை.ஏ.எம்.டி யாப்பா இது பற்றித் தெரிவிக்கையில்,

யுத்த அனர்த்தங்கள் காரணமாகப் பாதிக்கப்பட்ட ஆசிரிய மத்திய நிலையங்களைப் புனரமைக்கும் திட்டததின் கீழ் உலக வங்கி நிதி உதவி வழங்கி இருப்பதாகத் தெரிவித்தார்.

மன்னார்,வவுனியா, யாழ்ப்பாணம, திருகோணமலை, மட்டக்களப்பு, அமபாறை ஆகிய மாவட்டங்களில் இயங்கிவரும் 10 ஆசிரிய மத்திய நிலை யங்களுக்குத் தேவையான கட்டட வசதிகள் மற்றும் தளபாடங்கள் ஆகியன வழங்கப்படவுள்ளன.

கல்வியமைச்சின் புதிய கல்விச் சீர்திருத்த நடைமுறை குறிதது ஆசிரியருக்குத் தேவையான பயிற்சிகளை வழங்கவும் ஆசிரியர் சேவை தொடர்பான கற்பிததல் பயிற்சிகளை வழங்கும் நோக்குடனும் வலயம் தோறும ஆசிரிய மத்திய நிலையம ஏற்படுத்தப்பட்டுள்ளமை தெரிந்ததே.

இதேவேளை, வடக்கு-கிழக்கு மாகாணத்தில் இயங்கிவரும் ஆசிரிய மத்திய நிலையத்திற்குத் தேவையான கட்டட வசதிகள் மற்றும் பௌதக வளங்கள் போதியளவில் ஏற்படுத்தப்படாமையால் ஆசிரியர்களுக்கான பயிற்சி வழங்குவதில் சிரமம் ஏற்படுவதாக ஆசிரிய நிலைய முகாமையாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

(உ -2)

# அகில இலங்கைச் சைவ மாநாடு இன்று கோலாகல ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை நடாத்தும் அகில இலங்கைச் சைவ மாநாடு இன்று வெள்ளிக் கிழமை முதல் ஞாயிற்றுக்கிழமை வரையான மூன்று தினங்கள் யாழ். நீராவியடி சபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

இன்று முதலாம் நாள் காலை நிகழ்வுகள் காலை 9.00 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி பேராசிரியர் க. கோபாலகிருஷ்ண ஐயர் தலைமையில் இடம்பெறவுள்ளன.

இதில் அருளுரையை நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளும் வாழ்த்துரையை அகில இலங்கை சைவக்குருமார் அர்ச்சகர் சபைத் தலைவர் சிவஸ்ரீ க. கிருபானந்தக் குருக்களும் வர வேற்புரையை சைவபரிபாலன சபையின் சமயப்பிரசார அமைச்சர் ஆசிரியமணி அ.பஞ்சாட்சரமும் நிகழ்த் தவுள்ளனர்.

தொடர்ந்து, "கந்தபுராணத்தில் பக்திக் கோட்பாடு" என்ற தலைப்பில் கலாநிதி ம. வேதநாதனும் "திருக்கோயில்களில் திருமுறை" என்ற தலைப்பில் சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கமும் விரிவுரைகளை ஆற்றவுள்ளனர்.

அடுத்து 2003ஆம் ஆண்டு சைவசித்தாந்த பிரவேச, பாலபண்டித, பண்டிதர் தேர்வில் சித்திய டைந்தவர்களுக்குப் பட்டமளிப்பு இடம்பெறவுள்ளது.

முதல் நாள் மாலை நிகழ்வுகள் பி.ப. 2.30 மணிக்குக் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக்கலாசாலை முன்னாள் விரிவுரையாளர் திருமதி மங்கையர்க் கரசி திருச்சிற்றம்பலம் தலைமையில் இடம் பெற வுள்ளன.

இதில் "சைவ சமயக் கல்வியில் பெண்கள் பங்கு" என்ற தலைப்பில் திருமதி பண்டிதை பொன்: பாக்கியம், யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறைத் தலைவர் திருமதி நாச்சியார் செ ல்வநாயகம், யாழ். பல்கலைக்கழக விரி வுரையாளர் திருமதி மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோர் கருத்துரை நிகழ்த்தவுள்ளனர். (உ)

# இனங்களின் ஒற்றுமையை வலுப்படுத்த இடதுசாரிக் கட்சிகள் ஒன்றுபட வேண்டும்

## வாசுதேவ நாணயக்கார அழைப்பு

(கொழும்பு)

இனங்களுக்கிடையிலான ஒற்றுமையை ஏற்படுத் தும் வகையில் இடதுசாரிக் கட்சிகள் ஒன்றிணைய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதாக ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார கேட்டுள்ளார்.

இது பற்றி மேலும் கருத்து வெளியிட்ட வாசுதேவ நாணயக்கார,

உலக மயப்படுத்தலிற்கு எதிரான பொருளாதார முறை ஒன்றின் மூலம் நாட்டை அபிவிருத்தி செய்யவேண்டும்.

நாட்டின் இடதுசாரி சக்தி ஒன்று வளர்ந்து வருவது மக்கள் விடுதலை முன்னணியின் பிரச் சினையோ, இடது சாரியின் பிரச்சினையோ அல்ல.

இது நாட்டின் அரசியல் நிலையினால் ஏற்பட் டுள்ள பிரச்சினையாகும்.

கடந்த காலங்களில் இடதுசாரிக் கட்சிகளின் செயற்பாடுகள் முக்கியத்துவம் பெற்றிருந்தன. அவை மீண்டும் கட்டியெழுப்பப்பட வேண்டும் என்று தெரிவித்தார். (உ-2)

# இராசிபலன்

**05. 03. 2004**

**(மாசி 22, வெள்ளிக்கிழமை)**

| | | | |
|---|---|---|---|
| சதுர்த்தசி | பின்னிரவு | 6.13 | மணிவரை |
| ஆயிலியம் | நண்பகல் | 11.49 | மணிவரை |
| இராகுகாலம் | | 10.55-12.25 | மணிவரை |
| சுபநேரம் | | 6.25-7.55 | மணிவரை |

***மாசி மகம், நடேசரபிஷேகம்***

**மேடம்**
வியாபார நன்மை, புண்ணிய கருமம், காரிய தாமதம், நல்ல முயற்சி.

**இடபம்**
மாதாசுகம், ரோகநிலை, காரிய தாமதம், தொழில் சிந்தை.

**மிதுனம்**
புதிய முயற்சி, பிரயாண நன்மை, அந்நியர் சந்திப்பு, தன வரவு.

**கடகம்**
செல்வாக்கு, காரிய அனுகூலம், குடும்ப நலம், சிந்தனை மிகுதி.

**சிங்கம**
தெய்வ சிந்தை, உடல் நலம், நல்ல முயற்சி, போசன நன்மை.

**கன்னி**
அமைதிக் குறைவு, இடமாற்றம், காரிய தாமதம், பணவிரயம்.

**துலாம்**
பெருமையடைதல், தனலாபம், தெய்வ தரிசனம், தொழில் சிறப்பு.

**விருச்சிகம்**
நல்ல செய்தி, இஷ்ட சித்தி, அதிகாரம், குடும்ப மகிழ்ச்சி.

**தனுசு**
நல்ல காரியம், பிரயாணம், தேசாந்திர வாசம், சரீரப்பிரயாசை.

**மகரம்**
அதிர்ஷ்டக்குறைவு, ஆரோக்கியக் குறைவு, கலகம், பிரயாண பயம்.

**கும்பம**
தடைப்பட்ட காரியம் கைகூடும், விருந்துப சாரம், தேகநலன், பண வருவாய்.

**மீனம்**
மனமகிழ்ச்சி, காரிய அனுகூலம், தேகாரோக்கியம், பகைவர் நேசம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

- வளவன்.

# யாழ். குடாவில் திருட்டுச் சம்பவங்கள்

(யாழ்ப்பாணம்)

கடந்த சில நாட்களாக் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் திருட்டுச் சம்பவங்களும் கொள் ளைச் சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

கடந்த செவ்வாய்க்கிழமை அதிகாலை 3 மணியளவில் கல்வியங்காட்டுப்பகுதியில் உள்ள வீடு ஒன்றின் ஜன்னல் கம்பிகளைக் கழற்றி உள்ளே நுழைந்த கொள்ளையர்கள் பல லட்சம் ரூபா பெறுமதியான நகைகளையும், பணத்தையும் ஆயுத முனையில் கொள்ளையடித்துச் சென்றுள் ளனர்.

இதேவேளை, கடந்த செவ்வாய்கிழமை அதிகாலை 2 மணியளவில், யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் கைலாயபிள்ளையார் கோவி லுக்கு அருகில் உள்ள தையல் நிலையம் ஒன்றும் சலூன் ஒன்றும் உடைக்கப்பட்டு அங்கிருந்த பொருட்கள் திருடப்பட்டுள்ளன.

இதே தினம் அத்தியடிப் பகுதியில் வீடு ஒன்றி னுள் நுழைந்த திருடர்கள் அங்கிருந்த லான்சர் மோட்டார் சைக்கிளைத் திருடிச் சென்றுள்ளனர்.

அதேவேளை, இராசாவின் தோட்டம் வீதியில் அமைந்துள்ள தொலைத்தொடர்பு நிலையத்திலும் திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர்.

கடந்த சில நாட்களுக்கு முன்னார் யாழ்ப்பாணம் கலட்டிப்பகுதியில் வீடு ஒன்றின் ஓட்டைப் பிரித்து உள்ளே இறங்கிய திருடர்களால் பெறுமதிக்க நகைகளைத் திருடிச் சென்றுள்ளனர்.

கடந்த திங்கள் இரவு கொக்குவில் சந்தியில் அமைந்துள்ள தொலைத்தொடர்பு நிலையம் ஒன்றைப் பிரித்து உள்ளே சென்ற திருடர்கள் சுமார் ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான கைய டக்கத் தொலைபேசி அட்டைகள், பெருமளவு பணம் என்பவற்றைச் சூறையாடிச்சென்றுள்ளனர். (த-5,4)

## தொண்டைமானாறு நீரேரியில்

# இறால் பிடிப்பதற்கு மட்டும் இருமாத கால அனுமதி

(பலாலி)

தொண்டைமானாறு கடலேரியில் இறால் அதிகமாகக் காணப்படும் காலத்திற்கு மாத்திரம் அதாவது தற்காலிகமாக இரண்டு மாத காலத் திற்கு இரவு 12 மணி வரை கடற்றொழிலை மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக பலாலி பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

இது குறித்து வெளியிடப்பட்டுள்ள செய்திக் குறிப்பில், தொண்டைமானாறு கடலேரிப் பிரதேசம் உயர் பாதுகாப்பு வலயப் பகுதிக்குள் அமைந்துள்ள துடன், அதில் 1995ஆம் ஆண்டு முதல் மீன்பிடிக் கத்தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஆனாலும், இந்தப்பகுதியில் வசிக்கும் மீன வர்களின் வேண்டுகோளுக்கிணங்கவே மேற்படி சிபார்சு செய்யப்பட்டு பாதுகாப்பு அமைச்சின் காரியால யத்திற்கும் இது பற்றி அறிவிக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

# தேசவழமை

வரலாற்றுத்துறைப் பேராசிரியர்
சி.பத்மநாதன்
பேராதனைப் பல்கலைக்கழகம்.

## மூன்றாம் பகுதி

64

## திருகோணமலைத் தமிழரின் வழமைகள்

### 1.திருகோணமலை வன்னியரும் கோணேசர் கோயில் வழமைகளும் புராதன வழமைகள்

" ஆதியாகிய கோணைநாயகர் அறை முதலிற் பெரிய கணக்கும், வளமைப் பத்ததியும், ஆதியான கல்வெட்டும், அந்தக் காலத்திலேயே குளக்கோட்டு மாகாராசாதிட்டம் பண்ணி வைத்த கணக்கும் வட திசையதனிற் சோழவள நாடன் திருநெல்வேலிக் கதிபதியான கனகசுந்தர பொருமாளிடத்தில் உண்டு. எங்கள் கையிற் கணக்கு வரவும் செலவும் இவற்றின் கணக்குக்கண்டு வருடமொருக்காற் சகலருமிருந்து கணக்குப் பார்த்து கனகசுந்தர பெருமாள் பெரிய கணக்கு அவரிடத்திலேயன்றி எங்களிடத்தில் இல்லையென்று அக்குருகுலக் கணக்கன் சொல்ல, அப்பொழுது வன்னிபமும் மற்றுமுள்ள யாவரும் பேசிக்கொண்டு இத் திருமலையின் பெருமைப்பாடும் இதினினுள்ள பெருமைகளும் எங்கோமானாகியகுளக்கோட்டு மகாராசா நிறுத்திய திட்டங்களும் கேட்டறிய வேண்டுமென்று செண்பகராஜரையும், பெரிய பிள்ளைப் பண்டாரத்தாரையும், ஐந்து குடிமைகளையும் கூட்டிவிட்டு நீங்கள் நிலாவெளியென்னும் ஊருக்குப் போய்க் கனகசுந்தரப் பெருமாளுக்குச் சொல்லும் வசனம்"

"தம்மிடத்திலே மகாபெரும் புதினமான சில பெருமைகள் கேட்க வேண்டும் என்று, பெரிய கணக்கும் வளமைப்பத்ததியும், கல்வெட்டுப் பத்ததியும் எடுப்பித்துக்கொண்டு, நாங்கள் வரச் சொன்னோம் என்று கூட்டிக்கொண்டு வாருங்கள் என்று சொல்ல, அவ்ாகள் சென்று கூட்டி வர, வன்னிபமும் முதன்மையும் தவிர மற்றுமுள்ள யாவரும் எதிர்கொண்டிறைஞ்சி வன்னி பத்திற்குச் சரியான வரிசையுடனே இருத்தி ஆதியாகிய கோணநாயகர் கிருபையையும் பேசிக்கொண்டிருக்கும் போது தனியுண்ணாப் பூபால வன்னிபமும் இரு பாகை முதன்மையும் கனகசுந்தரப் பெருமாளைக்கேட்ட வசனம்"

கோணேசர் கோயிற் பரிபாலனம், கட்டுக்குளப்பற்று வன்னிபத்திற்குரிய வரிசைகள் , ஆலயம் தொடர்பாக கனகசுந்தரப் பெருமாள் மேற்கொண்டிருந்த பொறுப்புகள் என்னும் 3 பிரதான அம்சங்கள் இப்பகுதியில் உள்ளன. ஆலய பரிபாலனம் தொடர்பாக தனியுண்ணாப் பூபால வன்னிபத்தின் தலைமையிற் கோயில் மண்டபத்திற் கூடிய மாநாடு ஒன்றின் நடவடிக்கைகளைப் பற்றிய குறிப்பாகவே இப்பகுதி கொள்ளத்தக்கது. அதில் மேல் வரும் அம்சங்கள் அடங்கியுள்ளன.

1. நிலாவெளி கனகசுந்தர பெருமாளின் வதிவிடமாயிருந்தது;
2. கோயிற் காரியங்களை ஆராய்வதற்குச் சென்ற பொழுது கனகசுந்தர பெருமாளை இராச மரியாதைகளுடன் அழைத்துச்சென்றனர்;
3. கோயில் மண்டபத்திலே கூட்டம் கூடியபொழுது கனகசுந்தர பெருமாளுக்கு வன்னிபத்திற்குரிய வரிசைகள் வழங்கப்பட்டன;
4. கனகசுந்தர பெருமாளின் பொறுப்பிலே கோயிற் கணக்குகள், கோயிற்றொழும்பு வழமைகள் பற்றிய பொத்தகங்கள் இருந்தன;
5. வருடாவருடமாகக் கோயிற் கணக்குகளை ஆராய்ந்து பதிவு செய்வது வழமை.

### மெய்க்கீர்த்தி

கட்டுக்குளம் பற்று வன்னியர் காராளர் குளத்தவர். கல்வெட்டில் காராளரைப் பற்றிய மேல்வரும் வர்ணனை மெய்க்கீர்த்தி வடிவில் அமைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

"வடக்கு நாடன் திருநெல்வேலிக் கதிபதி
செங்குவளைத் தாரான் செந்நெல் முடியினன்
அரசரோடெதிர்த்து வாதுவென்றவன்
ஏருடன் மேழி இலங்கும் பதாகையன்
அன்னக் கொடியும் ஆவின் பெருக்கமும்
செந்நெற் குவியலுந் திரவியக்குப்பையும்.
நவமணிக்குவியலும் நாடொறுமிருக்க
மூவருக்கெளியான் மூவரைக்காப்பவன்
அன்னவன் மேன்மை அளவிடற் பெரிதாம்"

வன்னியர் குலம் ஒன்றின் சிறப்பினை மெய்க்கீர்த்தி வடிவில் அமைத்துக் கூறும் இது போன்ற வர்ணனை எதுவும் வேறு எந்த நூலிலும் காணப்படவில்லை.

### கொட்டியாரம் பற்று வன்னிபம்

கொட்டியாரம் பற்றிலே பதினாறாம் பதினேழாம் நூற்றாண்டுகளில் ஆட்சி புரிந்த வன்னிபங்களைப் பற்றிப் பல்வேறு மூலங்கள் வாயிலாக அறிய முடிகின்றது. வெருகற் சித்திர வேலாயுத சுவாமி கோயிலிலுள்ள சாசனமொன்று கயில வன்னியனார் என்னும் ஒரு வன்னிபத்தைக் குறிப்பிடுகின்றது. இச் சாசனத்திலே காலம் பற்றிய குறிப்பு எதுவுமில்லை. அதிலுள்ள எழுத்துக்களின் வரிவடிவ அமைப்பின் அடிப்படையிற் சாசனம் 16ஆம் நூற்றாண்டில் எழுதப்பெற்றதென்று கருதலாம். அச்சாசனம் மேல்வருமாறு உள்ளது.

"ஸ்ரீ சுப்ரமண்ய நம. தெற்கு மதில் கயில வன்னியனார் உபயம்;
(ம) திமராசா மகன் பழையிற் சிதம்பரப்பிள்ளை மேற்குப்
பிறமதில் மட்டக்கழப்பூரவர், நிகொம்புக்கரையூரவர். வடபுறம் செட்டியள் உபயம்"

சித்திர வோலாயுத சுவாமி கோயிற் திருப்பணிகள் நடைபொற்ற பொழுது, அதன் தெற்குப் மதில் கயிலாய வன்னியனார் என்பவரினாற் கட்டப்பெற்றது என்பதை இச்சாசனத்தின் மூலம் அறிய முடிகினறது. கயிலாயவன்னிபம் என வழங்கிய மூவரைப் பற்றிக் கோணேசர் கல்வெட்டின் மூலம் அறிய முடிகின்றது. காரைநகரால் வந்த வன்னிபங்களைப் பற்றிய பட்டியலிற் காணப்படும் பெயர்களில் நான்காவதாக வரும் பெயர் கயிலாயவன்னிபம் என்பதாகும். சோழ நாட்டு வன்னிபங்களின் வம்சத்திலுள்ளவர்களில் பதிமூன்றாவது பெயராக வருவது கயிலாய சிங்க வன்னிபம். மருங்கூர் மரபில் உள்ள வன்னிபங்களின் பெயர்களிற் பதினான்காவது இடத்தில் உள்ளது கயிலாய குமாரசிங்க வன்னிபம் என்பதாகும். வெருகற் கல்வெட்டு குறிப்பிடும் கயிலாய வன்னியனார் இம்மூவருள் ஒருவனென்றும் அவனுடைய ஆட்சி கொட்டியாரம் பற்றில் அமைந்திருந்தது என்றும் கொள்ளலாம்.

பதினேழாம் நூற்றாண்டில் ஐரோப்பியாரால் எழுதப்பட்ட நூல்களோடு வெளியிடப்பட்டுள்ள தேசப்படங்களில் கொட்டியாரம் பற்று (ஒரு) "இராச்சியம்" என்று வர்ணிக்கப்பட்டுள்ளமையும் கவனித்தற்குரியது. இலங்கையில் உள்ள இராச்சியங்கள், சிற்றரசுகள் என்பன பற்றி இந் நூல்களிற் காணப்படும் பட்டியல்களிலே திருகோணமலை, கொட்டியாரம் பற்று என்பனவும் குறிப்பிடப்படுகின்றன. பதினாறாம் நூற்றாண்டின் முடிவிலே கொட்டியாரம் பற்று வன்னிமையிற் கண்டியரசர்களின் மேலாதிக்கம் ஏற்பட்டிருந்தது. கண்டியில் அரசுரிமை குறித்து ஜயவீர பண்டாரனுக்கும் விமல தர்மனுக்குமிடையிற் போர் ஏற்பட்ட பொழுது ஜயவீரனுக்கு ஆதரவாகக் கொடடியாரம பற்று வன்னிபம் 7,980 போர் வீரர்களையும், 600 கூலியாட்களையும், 1000 பொதி மாடுகளையும், 30 போர் யானைகளையும், 25 அலியன் யானைகளையும் அனுப்பியிருந்தான் என்று சொல்லப்படுனின்றது. (தொடரும்

## தேசிய லொத்தர் சபையை ஜனாதிபதி பொறுப்பேற்றார்




## "முகங்களும் மூடிகளும்' வெளியீடு

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை கலை இலக்கியக் களத்தின் 48ஆவது ஒன்றுகூடல் நிகழ்வும் கோகிலா மகேந்திரனின் 'முகங்களும் மூடிகளும்' சிறுகதைத் தொகுதி வெளியீட்டு விழாவும் நாளை சனிக்கிழமை பி.ப. 3.00 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் இடம் பெறவுள்ளன.

சைவப்புலவர் கலாபூஷணம் சு. செலலத்துரை தலைமையில் நடைபெறவுள்ள மேற்படி நிகழ்வில் யாழ். பல்கலைக்கழகத்தின் உள மருத்துவத்துறைப் பேராசிரியர் தயா சோமசுந்தரம், கலாநிதி எஸ்.சிவலிங்ராஜா, காலாநிதி த.கலாமணி மற்றும் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன், மகளிர் அபிவிருத்தி நிலையத் தலைவி திருமதி சறோஜா சிவச்சந்திரன் ஆகியோர் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொள்ளவுளஎனர். (உ-18)

## தொடர்பு கொள்ளக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கீழே பெயர் குறிப்பிட்டவர்களை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவுடன தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

கஸ்பர் வில்பேட்-19/4பூங்கா வீதி, குருநகர்,

கணேசன் புனிதவதி-34,2ம் குறுக்குத்தெரு,

மணிப்புரி, கொழும்புத்துறை,
ம.நிலுப்சி-7ம் கட்டை, காங்கேசன் துறை வீதி, மல்லாகம்.

ரட்ணானந்தன் பவளக்கொடி-துர்க்கை அம்மன் கோவில், தெல்லிப்பழை.

கிட்டிணன் விமலராசா-வளலாய் மேற்கு, அச்சுவேலி.

பாலராசா இவோனி-மே/பா. புனித லிகோரியார் கோவில், சாவகச்சேரி.

எனோக் மெற்றில்டா-கீரிமலை வீதி, பெரியவிளான்.

துரைராசலிங்கம் சந்திரலீலா-மே/பா தங்கராசா, புகையிரத வீதி மல்லாகம்.

ஜெயக்குமார் செல்வலட் சுமி-செல்வகிருஷ்ணன் வீதி, சுழிபுரம் மத்தி.

க.பிரானசிஸ்-டசசு வீதி உடுவில்.

சதாசிவம் அங்கையற்கண்ணி கோப்பாய் வீதி, உரும்பிராய் தெற்கு.

குலசேகரம்பிள்ளை ராசமலர்-பராளை வீதி சுழிபுரம்.

சங்கரப்பிள்ளை லட்சுமி-மே/பா நகுலேஸ், கட்டுடை மானிப்பாய்.

வேலுப்பிள்ளை ராஜேஸ்வரி-78, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

கமலாதேவி நாகரத்தினம்-493 கமால் வீதி, யாழ்ப்பாணம்

க.ரகுபதி-அம்மன் கோவில்-ஊரெழு.

தேவராசா முத்துலட்சுமி-முதலாம் வட்டாரம், அல்லைப்பிட்டி.

திருமேனிப்பிள்ளை மாணிக்கரத்தினம்-ஆலடி ஒழுங்கை வல்வெட்டித்துறை.

ருசீந்திரம் ஜெயலட்சுமி-தேனியம்பை வீதி, வல்வெட்டித்துறை.

பழனியாண்டி பாலேஸ்வரன்-புது வீதி, வல்வெட்டித்துறை.

வரபிரகாசம் மேரி மெடலின்-புனித தொம்மையப்பர் வீதி, பருத்தித்துறை.

செபமாலை மாகிறட்-பதுவளை பொலிகண்டி.

அருளானந்தன் லூர்த்தம்மா-17/6 கடற்கரை வீதி, குருநகர்.

ரத்தினம் கணேசமூர்த்தி-முகமாலை தெற்கு, எழுதுமட்டுவாள்.

ம.ஸ்ரான்லி-கிளாலி, எழுதுமட்டுவாள்.

செல்லகுட்டி யசிந்தவநாதன்-எழுதுமட்டுவாள் வடக்கு.

அருளானந்தராசா பத்மராணி-நாகர்கோவில் கிழக்கு.

தம்பாப்பிள்ளை செல்வரத்தினம்-வல்லாலை ஒழுங்கை, தும்பளை.

சூசைதாசன் லீலாவதி-மே/பா சாம் ராசையா, உசன் மிருசுவில்.

ஆனந்தம் விமலேஸ்வரி-சிற்றிவெதுப்பகம், தும்பளை.

(உ)

## தேர்தல் வன்முறைகளுக்கு பவ்ரல் அமைப்பு கண்டனம்

(கொழும்பு)

சுதந்திரமானதும், நீதியானதுமான தேர்தலை நடத்துவதற்குத் தடையாக இருக்கும் அரசியல் கொலைகள் மற்றும் தோதல் வன்முறைகளை பவ்ரல் என்று அழைக்கப்படும் சுதந்திரமானதும், நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் செயற்பாட்டு அமைப்பு வன்மையாகக் கண்டித்துள்ளது.

மட்டக்களப்பு ஐக்கியதேசியக் கட்சி வேட்பாளரின் கொலையினையும், அதன்பின்னா் நடைபெற்ற ஈ.பி.டி.பி.இயக்க உறுப்பினரின் கொலையையும் வன்மையாகக் கண்டிப்பதாக அந்த அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் வன்முறைகள் இடம் பெறுவது வடக்கு-கிழக்கிற்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டதொன்றல்ல என்று சுட்டிக்காடடும் அந்த அமைப்பு நாட்டின் மத்திய பிரதேசங்களில் இடம்பெறும் தேர்தல் வன்முறைகளும் உடன் நிறுத்தப்பட வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்துள்ளது.

சுதந்திரமானதும், நீதியானதுமான தேர்தல் ஒன்றை நடத்துவதற்கான சூழ்நிலையை ஏற்படுத்த உதவுமாறு அரசாங்கத்திடமும, விடுதலைப்புலிகளிடமும் அந்த அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது. (உ)

# பாவங்கள் நீங்கிப் பயன் பெற

# மாசிமக விரதம் அனுஷ்டிப்போம்

**மாசிமக விரதம் இன்றாகும். அதனையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது.**

**வெள்ளி நற்சிந்தனை**

ஆண்டு தோறும் மாசிமாதத்தில் மகநட்சத்திரமும், பூரணை



யும் சேர்ந்து வரும் நாள் மாசி மக புண்ணியதினமாகக் கொண்டாடப்படுகின்றது. இந்நாள் கும்பகோணத்திற் கும்பமேளா எனும் பெருவிழாவாகக் கொண்டாடப் பட்டுவருகின்றது.

பன்னிரு ஆண்டுகட்கு ஒரு முறை இத்தினம் மகாமகம் எனப் பெரிதாகப் போற்றப்படுகின்றது. மாசிமகப் பொருநாள் பற்றிப் புராண வரலாறுகள் சிறப்பாக எடுத்துக் கூறுகின்றன.

***புராண வரலாறு***

முன் ஒரு காலத்தில் பிரமன் பிரளய காலம் வந்து உலகம் முழுதும் அழியப் போகின்றதென்பதை அறிந்து உலகம் அழிந்தாற் படைப்புத் தொழிலை எப்படிச் செய்வதெனத் துன்புற்றுச் சிவபிரானிடம முறையிட்டார். அப்பொழுது சிவபிரான் படைப்பிற்கான வித்தையும், பாதுகாக்கும் முறையையும் பிரமாவுக்கு அருளினார்.

இதை அறிந்த பிரம்மா நீரையும், அமிர்தத்தையும் கலந்து மண்ணாற் திருக்குடம் செய்து நூல், தேங்காய், மாவிலை, தர்ப்பை, பட்டுவஸ்திரம் என்பவற்றால் அலங்கரித்துப் பூரண கும்பமாக்கி, சிருஷ்டிக் கருவினை அதனுள் வைத்து வில்வத்தால் அர்ச்சனை பூசை செய்து மகாமேரு மலையின் உச்சியில் வைத்தார்.

பிரளய காலம் வந்தபோது, அக்கும்பம் ஊழிக்காற்றில் அடிபட்டு வந்து தென்னாட்டில் கும்பகோணத்தில் வந்து ஒதுங்கியது. அதில் இருந்தனயாவும் பல்வேறிடங்களிலும் பரவிப் பல்வேறு உருவங்களாய் முளைத்தன. சிவபெருமான் வேடுவ வேடங் கொண்டு வந்து அம்பு எய்திக் குடத்தினை உடைத்தனன். உடைந்த குடத்திலிருந்து அமிர்தம் எங்கும் பரவவும், திருக்குடமணணை எடுத்துத் தமது தேஜசை அதற்குக் கொடுத்து கும்ப லிங்கம், கும்ப லிங்கேசர் என அழைக்கப்படும் அருளுருவான மூர்த்தியை எழுந்தருளச் செய்தார்.

கும்பத்தில் இருந்து பரவிய அமுதம் தேங்கிய இடங்கள் பொற்றாமரை வாவித்தீர்த்தம், மகாமகத் தீர்த்தம் என்றவாறாகப் போற்றப்படுகின்றது.

ஒருமுறை நதிதேவதைகள் பல்லாயிரம் மக்கள் வந்து தம்மில் நீராடி அசுத்தம் செய்வதால் அவர்களின் குற்றங்கள் யாவும் எம்மிலேயே தங்கிவிடுகின்றன. இதனால் எமது மாசு நீங்க அருள் புரிய வேண்டும் என இறைவனிடம் வேண்டுதல் செய்தனர்.

அந்நதி தேவதைகளின் வேண்டுகோளுக்கு இரங்கிய சிவபிரான் "நீங்கள் யாவரும் மாசிமக நன்நாளிலே கும்பகோணத்திற்கு சென்று தீர்த்தமாடினால் மாசுகள் நீங்கப்பெற்றுத் தெய்வீகத் தன்மை அடைவீர்கள்" என அருளினார். அவ்வாறே நதி தேவதைகள் கும்பகோணத்திற் கலந்து தூய்மை பெற்றனர்.

மேலும் வருணபகவான் மாசி மகத்தினத்திலே கும்பகோணத்தில் தீர்த்தமாடி, அங்குள்ள கும்பேசுவரலிங்க மூர்த்தியை வழிபட்டுத் தன்னைப் பீடித்திருந்த பிரம்மகத்திதோஷம் நீங்கியதாகவும் புராணங்கள் சிறப்பாகக் கூறுகின்றன.

பல்வேறு சிறப்புக்களும் உரியதான கும்பகோணம் குடமூக்கு எனவும் குடவாசல் எனவும் பாணபுசம் எனவும் பெருமையுடன் போற்றப்படுகின்றது. இங்கே எழுந்தருளியிருக்கும் மூர்த்தியும் அமுதலிங்கேசர், ஆதிகும்பேசர், கும்பலிங்கேசுவரர் எனப் பலவாறாகப் போற்றி வழிபடுவதைக் காணலாம்.

***தாக்ஷாயணி அவதாரம்***

சிவசக்தி சொருபமான உமா தேவியார் தனக்கென ஒரு உருவம் வேண்டுமென இறைவனிடம் வேண்டுதல் செய்யவும், அதற்குத் திருவுளங்கொண்ட எம்பெருமான் அம்பிகையைக் காளிநதி நதியில் ஒரு தாமரைப் பூவில் வலம்புரிச் சங்கு வடிவமாக இருத்தினார், மாசிமக நன்னாளிலே தக்கன் தன் மனைவியோடு அங்கு நீராட வந்த போது அந்த வலம்புரிச் சங்கைக் கண்டு எடுத்ததும், அது ஒரு அழகிய பெண் குழந்தையானது.அப் பெண் குழந்தையே தாட்ஷாயணியாக மாசி மகத்தினத்திலே அவதரித்தமையால் அம்பிகையின் வழிபாடும் இந் நாளிலே பெரிதாகக் கொண்டாடப்படுகின்றது.

***மகாமகச் சிறப்பு***

வான சாஸ்திரப்படி பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை வியாழ பகவான் சிம்மராசிக்கு வரும்போது அந்த வருட மாசி மாதத்தில் வரும் மகநட்சத்திரமும் பௌர்ணமியும் சேருகின்ற நிலையில், கும்பராசியில் சூரியன் இவர்களையும், சிம்மராசியில் இருக்கும் வியாழ பகவானுடன் சேர்ந்தவர்கள் சூரிய பகவானையும் முழுப்பார்வையுடன் பார்க்கும் பெருநாளே பன்

**நீர்வைமணி**

னிரு ஆண்டுகட்கு ஒரு முறை வரும் மகாமகம் எனும் புண்ணியத்திருநாளாகப் போற்றி வழிபடப்படுகின்றது. ஆண்டுக்கு ஒரு முறை மாசி மகத்திலே மகநட்சத்திரமும், பௌர் ணமியும் கூடிய நாள் மாசிமகம் எனக் கொண்டாடப்பட்டுப், பன் னிரு ஆண்டு கட்கு ஒருமுறை வரும் மாசிமகம், மகாமகம் எனப் பெரிதாகப் போற்றப்பட்டு விழாக்கள் வழிபாடுகளு டன் புனித நீராடி விரதம் அனுட் டிக்கப் படுகின்றது.

**மடலார்ந்த தெங்கின் மயிலை**
**யார் மாசிக்**
**கடலாட்டுக் கண்டான் கபா**
**லீச்சர மமர்ந்தான்**
**அடலா னேறூரு மடிக னடி பரவி**
**நடமாடல் காணாதே போதியோ**
**பூம்பாவாய்**

# புலிகள்மீது தடை விதித்துள்ள நாடுகள் அதனை அகற்ற முன்வரவேண்டும்

## ஐ.நா. நோக்கிய பொங்குதமிழ் பேரணி ஏற்பாட்டுக் குழு அறிக்கை

(கிளிநொச்சி)

உலகத் தமிழினத்தின் ஒரே இலக்கு தமிழீழமே என்பதை வலியுறுத்தும் வகையில் ஐ.நாவை நோக்கிய பொங்குதமிழ் பேரணி சுவிற்சர்லாந்தின் ஜெனீவா நகரில் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 5ஆம் திகதி பேரெழுச்சியுடன் இடம்பெறவுள்ளமை தொடர்பாகப் பேரணியின் ஏற்பாட்டுக்குழு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதில் குறிப்பிடப பட்டிருப்பதாவது.

தமிழர் தாயகத்தில் ஒன்றுதிரண்ட தமிழரின் பலம் இலங்கையின் தலைவிதியை நிர்ணயிக்கின்ற காலம் கனிந்துவரும் வேளை இது.

உலகத் தமிழினம் முழுவதும் தமிழீழத் தாயகத்தின் பின்னே என்பதை மீண்டும் ஒருமுறை அனைத்துலகச் சமூகததிற்கும் உணர்த் தும் விதமாக ஓங்கி முரசறைய வேணடிய தேவை தற்போது ஏற்பட்டுள்ளது.

உலகத தமிழினம் தமிழீழத்தை நோக்கியே என்பதை வலியுறுத்தும் வகையில் ஐ.நாவை நோக்கிய பொங்குதமிழ்ப் பேரணியில் ஐரோப்பாவில் வாழும் அனைத்துத் தமிழர்களும் கலந்துகொள்வார்கள் என நாம் எதிர்பார்க்கிறோம்.

தேசத்தின் வலிமைக்கும் வளர்ச்சிக்கும் இடையூறு ஏற்படும்போதெல்லாம் உரமிட்டு உணர்வு நீரூற்றி வளர்த்தவர்கள் புலம்பெயர்ந்த தமிழ் மக்கள்.

அந்த வகையில், தமிழர் பலத்தினை அவர்கள் இலட்சியத்தின் மீது கொண்டுள்ள உறுதிப்பாட்டினை உலகறியச்செய்ய அனைவரும் அணிதிரளவேண்டும்.

இவ்வாண்டு பொங்குதமிழ்ப் பேரணியில் தமிழீழ மக்களின் அபிலாஷைகளான தாயகம், தேசியம், தன்னாட்சி உரிமை என்பன அங்கீகரிக்கப்படவேண்டும்.

தமிழரின் ஏகப்பிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப் புலிகள் மீது தடைவிதித்துள்ள நாடுகள் அத்தடையை அகற்றவேண்டும்.

உயர்பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் மக்களின் வாழ்விடங்களை ஆக்கிரமித்துள்ள அரச படைகள் உடனடியாக அவ்விடங்களை விட்டு வெளியேறவேண்டும். தமிழீழக் கடற்பரப்பில் மீனவர்கள் எவ்வித அச்சுறுத்தலும் இன்றிச் சுயாதீனமாகத் தொழில் செய்யவேண்டும். அவர்களது பாதுகாப்பு உறுசெய்யப்படவேண்டும்.

தற்போது நிலவும் சமாதானச் சூழலைப் பயன்படுத்தி அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் அனைத்து சிங்களக் குடியேற்றங்களும் உடன் நிறுத்தப்படவேண்டும்.

அகதித் தஞ்சம்கோரி வெளிநாடுகளில் வாழும் இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைகள் தீரும் வரை அவர்களைத் திருப்பி அனுப்பக்கூடாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-64,8)

# தாக்குதலில் இருந்து திருமலை துறைமுகத்தைப் பாதுகாத்தது நானே

## ஜனாதிபதி இறுமாப்பு

(அநுராதபுரம்)

படைத்துறை அமைச்சைத் தான் பொறுப்பெடுக்காமல் விட்டிருந்தால் விடுதலைப்புலிகளால் திருகோணமலைத் துறைமுகம் நிச்சயமாகத் தாக்கப்பட்டிருக்கும் என்று ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

அநுராதபுரத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் பிரசாரக கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே ஜனாதிபதி இதனைக் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

சமாதான ஒப்பந்தத்தை முறிக்கும் வகையில் குண்டுத்தாக்குதலில் ஈடுபடுமாறும் ஏ-9 நெடுஞ்சாலையை மூடிவிடுமாறும் ஐக்கிய தேசியக் கட்சி விடுதலைப் புலிகளைக் கேட்டுக் கொண்டபோதும் எதுவும் பலிக்கவில்லை. சிறப்பான முறையில் சமாதான ஒப்பந்தம் இன்றும் நடைமுறையில் இருக்கின்றது.

ஆட்சிக்கு வரும் எந்த அரசுடனும் பேச்சுக்களில் ஈடுபடுவோம் என் பதையும் விடுதலைப் புலிகள் தெளிவாகக் கூறியுள்ளனர். விடுதலைப் புலிகளுடன் பேசுவதற்கான முயற்சிகளில் நான் ஈடுபட்டு வருகின்றேன்.

திருகோணமலைத் துறைமுகம் தாக்குதலுக்கு உள்ளாகும் அச்சம் முன்பு இருந்து வந்தது. தற்போது அப்படி இல்லை. ரணில் விக்கிரமசிங்கவின் சமாதானச் செயற்பாடுகளால் இலங்கை சில நன்மைகளைப் பெற்றுள்ளபோதும் சமாதானத்தை நிலைநாட்டுவது தொடர்பில் பெரிதளவில் எதுவும் சாதிக்கப்படவில்லை.

விடுதலைப்புலிகள் தமது படைப்



பலத்தைப் பெருமளவில் கட்டியெழுப்பியுள்ளனர். தனது நாட்டுப் படையினரை ரணில் விக்கிரமசிங்க காட்டிக்கொடுத்ததன் காரணமாக விடுதலைப்புலிகளுக்கு எதிராக சிறப்பாகச் செயற்பட்டு வந்த 40 உளவுத்துறையினர் உயிரிழக்க நேர்ந்தது என்று சுட்டிக் காட்டியுள்ளார்.

(உ)


## சிறு விளம்பரம்

### விற்பனை

மிகவும் நல்ல நிலையில் உள்ள BOXER RED CT-DELUX விற்பனைக்கு உண்டு. 230, நாவலர் றோட், யாழ். (8425)


## அடிப்படை கற்கை நெறியம்

(யாழ்ப்பாணம்)

பாடசாலையில் இருந்து இடைவிலகிய மாணவர்களை மீண்டும் பாடசாலைகளில் இணைப்பதற்குரிய நடவடிக்கைகளில் "அறிவகம்" அடிப்படைக் கற்கை நெறியம் எனும் அமைப்பு தீவிரமாக ஈடுபட்டு வருகிறது.

கடந்த காலத்தில் யாழ்.குடாநாட்டில் இடம்பெற்ற போர் அனர்த்தங்களின் விளைவாக உருவான வறுமை காரணமாக ஆயிரக்கணக்கான மாணவர்கள் தம் கல்வியை இடைநிறுத்தியுள்ளனர்.

இத்தகைய மாணவப்பருவத்தினரை இனம் கண்டு அவர்களை மீண்டும் பாடசாலைகளில் இணைக்கும் நடவடிக்கைகளில் இவ்வமைப்பு ஈடுபட்டுவருகிறது.

இதன் முதற்கட்டமாக ஜே / 68, ஜே/ 69, ஜே/ 70, ஜே/ 71,ஜே/ 72 ஆகிய கிராம சேவகர் பிரிவுகளில் இந்நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (உ-3)

## கொலைச் சந்தேக நபர் சிக்கவில்லை

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஈழ மக்கள் ஜனநாயகக்கட்சி உறுப்பினரின் கொலைச் சம்பவம் தொடர்பாக இதுவரை சந்தேகத்தின பேரில் எவரும் கைது செய்யப்படவில்லை என்று வாழைச்சேனைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பான விசாரணை தொடர்ந்தும் இடம் பெற்று வருவதாகவும் பொலிஸார் கூறியுள்ளனர். (உ-2)

## வீடு எரிந்தது

புன்னாலைக்கட்டுவன் குட்டியப்புலத்தில் ஓலை வீடொன்று முற்றாக எரிந்து சாம்பலாகியது. அடுப்பில் இருந்த நெருப்பு தவறுதலாக கூரையில் பட்டதால் இவ் அனர்த்தம் நிகழ்ந்துள்ளதாகத் தெரி விக்கப்படுகின்றது.

விவசாயியான பொ.தபேந்திரன் என்பவரின் வீடே எரிந்துள்ளது. இவர் அண்மையில் வெங்காயம் விற்றுப்பெற்ற 32ஆயிரம் ரூபாவும் எரிந்துள்ளதாகக் கூறப்படுகின்றது. (உ)

## மகளிர் தின விழா

மகளிர் அபிவிருத்தி நிலையமும், கிராமிய உழைப்பாளர் சங்கமும் இணைந்து நடாத்தும் மகளிர் தின விழா எதிர்வரும் 7ஆம் திகதி காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணிவரை யாழ்.இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (உ-19)

# புதுவைத் தொகுதிப் பிரச்சினை தொடர்ந்து நீடிக்கிறது

(சென்னை)

தமிழ்நாட்டில் தேர்தல் முறைகேடுகள் நடைபெறாமல் தடுக்க தேவையான நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று காங்கிரஸ், தி.மு.க. மற்றும் கம்யூனிஸ்ட் கட்சிகள் தேர்தல் ஆணையாளரிடம் மனு கொடுத்திருப்பதாகத் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் ஜீ.கே.வாசன் கூறியிருக்கிறார்.

செய்தியாளர்களிடம் அவர் பேசுகையில், காங்கிரஸ் வேட்பாளர் பட்டியலைப் பொறுத்தவரை தேர்தல குழுவும், கட்சித் தலைவர் சோனியா காந்தியும் அவற்றைப் பரிசீலித்து வருவதாகவும், விரைவில் பட்டியல் அதிகாரபூர்வமாக வெளியிடப்படும் என்றும் அவர் கூறினார்.

புதுவைத் தொகுதியைப் பொறுத்தவரை பிரதேச காங்கிரஸ் கட்சியினர் கட்சித் தலைமையுடன் பேசி முடிவுகாண்பார்கள் என்றும் வாசன் கூறினார்.

புதுவை மக்களவைத் தொகுதியைக் காங்கிரஸுக்கே தரவேண்டும் என்பதைக் கட்சித் தலைமையிடம் வலியுறுத்துவதற்காகப் பிரதேச காங்கிரஸ் தலைவர் வி.நாராயணசாமி புதுடில்லி சென்றுள்ளார்.

13ஆவது மக்களவையின் புதுவை உறுப்பினரான எம்.ஒ.எச். பாருக்கும் தற்போது புதுடில்லியில் முகாமிட்டுள்ளார்.

புதுவைத் தொகுதியைக் காங்கிரஸுக்கு ஒதுக்காவிட்டால், எந்தப் போராட்டத்தையும் சந்திக்கத் தயார் என்று பிரதேச காங்கிரஸ் துணைத் தலைவர் வி.சபாபதி உறுதிபடக் கூறியுள்ளார். (து)

# பெரியகுளம் தவிர மற்றைய தொகுதிகளில் அ. தி. மு. கவை ஆதரிப்போம்

## சுப்பிரமணிய சுவாமி அறிவிப்பு

(மதுரை)

வரும் மக்களவைத் தேர்தலில் மதுரைத் தொகுதியிலிருந்து தான் போட்டியிடப் போவதாக ஜனதாக் கட்சித் தலைவர் சுப்பிரமணிய சுவாமி கூறியிருக்கிறார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் மற்றைய தொகுதிகளில் தனது கட்சி அ.இ.அ.தி.மு.கவுக்கு ஆதரவு அளிக்கும் என்றார்.

பெரிய குளம் தொகுதியல் தமது கட்சி அ.இ.அ.தி.மு.கவுக்கு ஆதரவு அளிக்காது என்றும் குறிப்பிட்டார்.

தமது தேர்தல் பிரசாரத்தை வரும் 20 ஆம் திகதி மதுரையில் துவக்க இருப்பதாகவும் அவர் கூறினார்.

ராஜீவ் காந்தி கொலை பற்றிய ஜெயின் கமிஷன் முதல் அறிக்கையில் கூறியிருக்கும் விஷயங்கள் பற்றி மீண்டும் விவாதிக்கப் போவதில்லை என்றே இரண்டாம் அறிக்கையில் கூறியிருக்கிறது. ஆதலால் தி.மு.கவுக்கு இதில் பங்கு எதுவும் கிடையாது என்று கமிஷன் தெளிவுபடுத்திவிட்டதாக காங்கிரஸ் கூறுவது தவறு என்று சுப்பிரமணிய சுவாமி கூறியிருக்கிறார். (து)

# அத்வானியின் நாடளாவிய தேர்தல் சுற்றுப் பயணம்

## இம் மாதம் 10ஆம் திகதி ஆரம்பமாகிறது

துணைப்பிரதமர் எல்.கே. அத்வானி இந்த மாதம் 10ஆம் திகதி கன்னியாகுமரியில் 'பாரத் உதய்' யாத்திரை என்ற நாடு தழுவிய தேர்தல் சுற்றுப்பயணத்தை ஆரம்பிக்கின்றார்.

சென்னையில் இதனைத் தெரிவித்த பா.ஜ.கட்சியின் தேசிய செயலர் இல.கணேசன், இந்த யாத்திரையின் துவக்கம் தமிழகத்தில் பாரதீய ஜனதாக்கட்சியின் தேர்தல் பிரசாரம் துவங்குவதைக் குறிப்பதாக அமையும் என்றார்.

தமிழகத்தில் பா.ஜ.க. போட்டியிடும் 6 தொகுதிகளில் நான்கில் அத்வானி தேர்தல் பிரசாரம் செய்வார் என்றும் அவர் கூறினார். (து)

# ஸ்டாலின்-தயாநிதமாறன் வைகோவைச் சந்தித்தனர்

(சென்னை)

தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர் மு.க.ஸ்டாலின், மத்திய சென்னை மக்களவை வேட்பாளர் தயாநிதி மாறன் ஆகியோர் ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோவை நேற்று முன்தினம் சந்தித்துப் பேசினார்கள்.

மக்களவைத் தேர்தலையொட்டி கூட்டணிக் கட்சித் தலைவர்களைச் சந்தித்துப் பேசி வருவதாகவும், அந்த அடிப்படையிலேயே வை.கோவைத் தாங்கள் சந்தித்ததாகவும் ஸ்டாலின் தெரிவித்தார். (து)

# மதத்தில் அரசியல் தலையீடு கூடாது

## காஞ்சி சங்கராச்சாரியார் அறிவிப்பு

(சென்னை)

மக்களவைத் தேர்தல் முடியும்வரை அயோத்திப் பிரச்சினைகுறித்து யாரும் கருத்துத் தெரிவக்கவேண்டாம் என்று காஞ்சி சங்கராச்சாரியார் ஸ்ரீஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் கருத்துத் தெரிவித்திருக்கிறார்.

விஜயவாடாவில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் மத சம்பந்தப்பட்ட விடயங்களில் எவ்வித அரசியல் தலையீடும் இருக்கக்கூடாது என்று கருத்துத் தெரிவித்தார் . (து)


# பா.ம.கட்சிக்கு பிரசாரம் செய்ய வை.கோபாலசாமிக்கு அழைப்பு

(சென்னை)

பாட்டாளி மக்கள் கட்சி சார்பில் அறிவிக்கப்பட்டுள்ள 6 வேட்பாளர்களும் நேற்றுமுன்தினம் கட்சியின தலைவர் ஜி.கே.மணி தலைமையில் ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வை.கோவை அவரது இல்லத்தில் சந்தித்தனர்.

சந்திப்பின் பின் செய்தியாளர்களிடம் பேசிய வைகோ பா.ம.க போட்டியிடும் 6 தொகுதிகளிலும் பிரசாரம் செய்ய வருமாறு தமக்கு அழைப்பு விடுத்ததாகவும், தான் அதை ஏற்றுக்கொண்டதாகவும் தெரிவித்தார்.

தி.மு.க. சார்பில் வட சென்னைத் தொகுதியில் போட்டியிடும் குப்புசாமி வைக்கோவைச் சந்தித்துப் பேசினார். (து)



# தமிழகத்தில் சோனியாகாந்தி தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடுவார்

(சென்னை)

காங்கிரஸ் கட்சியின் மத்திய தேர்தல் குழு வேட்பாளர்களைத் தெரிவுசெய்து வருவதாகவும், இந்தப் பணி இரண்டு, மூன்று நாட்களுக்குள் முடிவடைந்து விடும் என்றும், அதன் பின்னர் வேட்பாளர் பட்டியல் வெளியிடப்படும் என்றும் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியன் தலைவர் ஜி.கே.வாசன தெரிவித்திருக்கிறார்.

நேற்று முன்தினம் விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தமிழகத்தில் காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடவிருப்பதாகக் கூறினார். (து)

# இந்தியச் செய்திகள்

# "இந்தியா ஒளிர்கிறது" விளம்பரத்தை தடைசெய்யக் கோரி உச்ச நீதி மன்றத்தில் மனு

(புதுடில்லி)

"இந்தியா ஒளிர்கிறது" என்ற விளம்பரத்தைத் தடை செய்ய வேண்டும் என்றும், அவ் விளம்பரத்துக்காகச் செலவிடப்பட்ட தொகை எவ்வளவு என்பதைத் தெரிவிக்க வேண்டுமென்றும் கோரித்தாக்கல் செய்யப்பட்ட இரண்டு பொது நல மனுக்களை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட உயர் நீதிமனறத்தின் தலைமை நீதிபதி பி.சி.பட்டேல், நிதிபதி பி.ரி. அஹமத் ஆகியோரைக் கொண்ட பெஞ்ச், விளம்பரத்துக்குப் பயன்படுத்தப்பட்ட நிதி விபரங்கள், மற்றும் எந்த விதி முறைகளின்படி விளம்பரச் செலவுகள் மேற்கொள்ளப்பட்டன என்பன குறித்த விபரங்களை ஒருவார காலத்துக்குள் அறிவிக்க வேண்டுமென்று மத்திய அரசைக் கேட்டுக் கொண்டிருக்கிறது.

"இந்தியா ஒளிர்கிறது" விளம்பரத்துக்கான நிதி நடப்பு 2003 - 2004ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டதாக மத்திய சட்ட அமைச்சர் அருண் ஜெட்லி கூறியிருக்கிறார்.

நேற்று முன் தினம் புதுடில்லியில் பி.ரி.ஐ.செய்தியாளர்களிடம் பேசிய அவர் இரு வாரங்களுக்கு முன்வரை இதற்காக ஒதுக்கப்பட்ட நிதியில் அரைவாசி கூடச் செலவிடப்படவில்லை என்றார்.

இந்த விளம்பரத்துக்காக 700 கோடி ரூபா செலவிடப்பட்டதாக வமர் சிக்கப்படுவது உணமை நிலையை மிகைப்படுத்திக் கூறுவதாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

மத்திய அரசு தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் இது போன்ற விளம்பரங்கள் ஒன்றும் புதிதல்ல என்றும் முன்னர் பதவியில் இருந்த மத்திய, மாநில அரசுகள் இது போன்ற விளம்பரங்களைச் செய்திருக்கின்றன என்றும் தெரிவித்தார்.

தேர்தல் நடத்தை விதிகள் அமுலுக்கு வரும் நாளில் இருந்து இதனை உறுதியாகக் கடைப்பிடிக்க மத்திய அரசு உறுதி பூண்டிருக்கிறது என்றும் அவர் நீதிபதிகளிடம் தெரிவித்தார். இவ்விபரங்களைப் பொது மக்களுக்குத் தெரிவிக்கவேண்டியது அவசியம்தான் என்றாலும், இது மத்தய அரசுக்குச் சுமையாக இருகக்க் கூடாது என்றும் அவர் மே[illegible] கூறினார்.

இவ் விளம்பர விஷயத்தில் பிற[illegible]பிக்கப்பட்டுள்ள உத்தரவுகள் அனைத்தையும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு தேர்தல் ஆணையத்தை நீதிபதிகள் கேட்டுக்கொண்டனர். (து)

# நாடு இரண்டாகப் பிரிந்ததே பிரச்சினைகளுக்குக் காரணம்

## துணைப் பிரதமர் அத்வானி அறிவிப்பு

இந்தியா - பாகிஸ்தான் இடையே பதற்றத்தைத் தணிப்பதன் மூலமே இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும் என்று துணைப் பிரதமர் எல்.கே அத்வானி கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் டில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், நாடு இரண்டாகப் பிரிந்ததுதான் இரு தரப்பினரின் பிரச்சினைகளுக்கும் காரணமாகிவிட்டது என்றும், இரு நாடுகளுக்கும் இடையே நடை பெற்ற யுத்தம் கசப்புணர்வை மேலும் அதிகப்படுத்திவிட்டது என்றும் குறிப்பிட்டார்.

பாகிஸ்தானுடன் அமைதி ஏற்படுத்த அரசு மேற்கொண்டுள்ள முயற்சிகள் இந்தப் பதற்றத்தைத் தணிக்க உதவும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

நாட்டு மக்களின் கல்வி, செல்வம் மற்றும் வளர்ச்சியில் அரசு அக்கறை கொண்டிருப்பதாகக் கூறிய அத்வானி, இதற்குப் பொது மக்களின் ஆதரவும் தேவை எனக் குறிப்பிட்டார். (து)

# செவ்வாய்க் கிரகத்தில் தண்ணீரும் உப்பும் கண்டுபிடிக்கப்பட்டதாக நாஸா விஞ்ஞானிகள் அறிவித்துள்ளனர்

ஒரு காலத்தில் செவ்வாய் கிரகத்தில் உயிரினங்கள் வாழ்வதற்குப் போதிய தண்ணீரும், உகந்த நல்ல சுற்றுச் சூழலும் இருந்திருப்பதாக அமெரிக்காவின் நாஸா விஞ்ஞானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

செவ்வாய்க் கிரகத்துக்குச் சென்றுள்ள ஒப்பசூனிற்றி என்ற ஆய்வுக் கலம் அனுப்பிய புள்ளி விபரஙகளைப் பரிசீலித்த பின்னரே விஞ்ஞானிகள் இவ்வாறு கூறியுள்ளனர்.

இருப்பினும் செவ்வாய்க் கிரகத்தில் உயிரினங்கள் வாழ்ந்திருந்ததை உறுதிசெய்வதற்கான ஆதாரங்கள் எதுவும் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை என்றும் அவர்கள் கூறினர். தற்போது 'ஒப்பசூனிற்றி' இறங் கியுள்ள இடத்தில் ஒரு காலத் தில் தணணீர் சூழ்ந்திருந்தது என்று கருதப் படுகறது என்று நாசா விஞ் ஞானி எட்வேட் வேணர் கூறியி ருக்கிறார்.

அந்தப் பகுதி வாழ்வதற்கேற்ற நல்ல சூழலைப் பெற்றிருந்ததாகவும் கருதப்படுகின்றது என்றார் அவர்.

'ரெபேட்' ஆய்வுக்கலம் அங்கு கல்பீட்டுக்களும் இதர கனிமங்களும் இருந்ததைக் கண்டுபிடித்துள்ளது.

ஒப்பசூனிற்றி ஏராளமான உப்புக்களின் இருப்பைக் கண்டுபிடித்திருக்கின்றது. இந்த உப்புக்கள் பாறைகளின் மேற்பரப்பில் மட்டுமன்றிப் பாறைகளுக்கு உள்ளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. உப்புகள் தண்ணீரில் கரைந்து பின்னர் தண்ணீர் ஆவியான பிறகு ஏற்படக்கூடிய படிவுகளே இவை என்று கூறும் விஞ்ஞானிகள் இவ்வளவுக்குப் பிறகும் அங்கு உயிரினங்கள் வாழ்நதிருந்ததாக அர்த்தம் செய்து கொள்ள முடியாது என்று குறிப்பிட்டுள்ளனர். (து)

# அன்று சொன்னதை இன்று மீறுகிறார்கள்

## காங்கிரஸ் மீது கணேசன் சாடல்

(சென்னை)

எந்தக் கட்சியுடனும் தேர்தலில் கூட்டணி அமைக்கமாட்டோம் என்று கூறிவந்த காங்கிரஸ் தற்போது கூட்டணி ஆட்சி அமைப்போம் என்று கூறி இறங்கி வந்திருப்பதாக பா.ஜ.கவின் அகில இந்தியச் செயலர் இல.கணேசன் கூறியிருக்கிறார்.

நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இதனைக் கூறினார்.

இம்மாதம் 10 ஆம் திகதி துணைபபிரதமர் அத்வானி கன்னியாகுமரியில் துவக்கவிருக்கும் "பாரத் உதய்" யாத்திரை பற்றி விளக்கினார்.

நாங்கள் கூட்டணியே வைக்க மாட்டோம்; தனியே நின்று தான் ஆட்சி ஆமைப்போம் என்று விரதம் பூண்டிருந்த காங்கிரஸ் கட்சி, இன்று கூட்டணி அ[illegible]ப்போம் என்று சொல்லக் கூடிய அளவுக்கு இறங்கி வந்திருக்கிறார்கள். கூட்டணியே வேண்டாம் என்று சொன்னவர்கள் இத் தேர்தலில் கூட்டணி அமைக்க முன் வந்திருப்பது ஆச்சரியமானது என்று இல. கணேசன் மேலும் கூறினார். (து)

வெள்ளி முற்றம்

# கிழவரும் கிழவியும்

சொக்கன்

எல்லாம் நடந்து முடிந்து விட்டன. கிழவி சுடலையிலே எரிந்து சாம்பலானது,காடகற்றியது, அந்தியேட்டி, வீட்டுக்கிருத்தியம், ஆத்ம சாந்திப்பிரார்த்தனை, நினைவு மலர் வெளியீடு, உற்றார்,உறவினர், நண்பர்களுக்கு மதிய போசனம் எல்லாமே முடிந்துவிட்டன. முப்பத்தொரு நாள்கள் எப்படியோ ஓடி மறைநதுவிட்டன. வீட்டைக் கௌவியிருந்த சோகம் கிழவி கட்டையைப் போட்ட மறுநாளே மெல்லமெல்லப் பொய்யாய் பழங்கதையாய்...

கிழவியின் மக்கள், மருமக்கள், பேரன் பேர்த்தி எல்லாருமே வழமைக்குத் திரும்பி விட்டார்கள். வீட்டில் ஒரே குதிப்பும் கும்மாள முந்தான. சமையல்,சாப்பாடு, தொழில் , படிப்பு,தொலைக்காட்சி ரசனை, விருந்தினர் வருகை, வம்பளப்பு என்ற எல்லாமே பழைய படி குடியேறத் தொடங்கிவிட்டன.

இவ்வளவையும் சுவரில் தொங்கும் படத்திலே இருந்தவண்ணம் கிழவி, மாறாத- எப்படி மாறும்? படம் சடந்தானே? - புன்னகையோடு பார்த்துக் கொண்டிருக்கிறாள்!

இத்தனைக்கும் மாறாக அந்த வீட்டில் நடைப் பிணமாக உலாவிக் கொண்டு பழைய நினைவுகளிலே மூழ்கிப் போய்க் கிடந்த ஒரே ஒரு சீவன் கிழவியோடு அரை நூற்றாண்டிற்கு மேல் தாம்பாத்தியத்தில் இணைந்திருந்த கிழவர் தாம்.

எப்படி மறப்பது? எதை மறப்பது?

நினைவுகள் எல்லை கடந்து மனக்கடலிலே அலையெறிகையில் கிழவருக்கு நெஞ்சே உடைந்து விடும். போல இருக்கின்றது. கண்களில் நீர் வடிய விம்மலும் புலம்பலுமாய் அவர் கழிக்கும் வேளைகள் சுற்றியிருப்பவர்களின் இரக்கத்தைக் கிளப்பிவிடுவதும், அவர்கள் ஆறுதல் கூறுவதும் படிப்படியாக ஓய்ந்து, சலிப்புக்கும் ஏன் வெறுப்புக்கும் கூட இடமாகி விடுகின்றன.

கிழவரைப் புரிந்து கொண்டு ஆறுதல் கூறுவதில் இன்னும் சலிப்படையாதவள் அவரின் கடைக குட்டி வத்சலாதான்.

"அப்பா, அழாதையுங்கோ. அம்மா அனுபவிக்கவேண்டியதெல்லாத்தையும் அனுபவிச்சிட்டு நிறை சுமங்கலியாய் பொட்டோடும் பூவோடும் போயிட்டா. அவவின்ரை ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்தியுங்கோ அதை விட்டிட்டு அழுது புலம்பி என்ன பயன்? உங்கடை பிள்ளையள் நாங்கள் இருக்கிறம் உங்களைப் பூப்போலை வைச்சிருபபம் ஒரு குறையும் விடமாட்டம், ஒண்டுக்கும் யோசியாதையுங்கோ".

அவளின் வார்த்தைகள் போலி அல்ல என்பதைக் கிழவர் உணர்ந தாலும அவரின் வேதனை குறைந்தபாடில்லை. "பிள்ளை நீங்கள் என்ரை உடலைப்பேணிப் பாதுகாப்பியள் எண்டு எனக்குத் தெரியும். ஆனால் என்ரை மனத்துக்கு உண்டாகும் நோயளுக்கு ஒத்தடம் கொடுத்துப் பேணியவள் எனக்கு இல்லை" என்று சொல்லி விட்டுக் கிழவர் மீண்டும் விம்மி வெடிக்கிறார்.

வத்சலாவுக்கும் கொஞ்சம் கொஞ்சமாகச் சலிப்பு ஏற்பட்டு வளர, இப்போது அவருக்கு ஆறுதல் சொலல எவரும் முன்வருவதில்லை. அவரோடு பேசுவதோ, கதை கொடுப்பதோ கூடப் படிப்படியாகக் குறையத் தொடங்கி விட்டது. சுற்றம் சூழ்ந்திருந்தும் தனித்தவராய் அநாதையாய்ப் போய் விட்ட உணர்வோடு, சோகம் அவரை முற்றாக ஆடகொண்டு விழுங்கியதாய் அவா உணர்கின்றார்.

தொய்வுக்காரரான அவருக்கு அவ்வப் போது தேவைப்படும் மருந்துக்கோ சிகிச்சைக்கோ குறைவில்லை. நேரத்துக்கு நேரம் அவருக்கும், அவருடைய முதிய உடலுக்கும் சீரண சக்திக்கும் ஏற்ற உணவுக்கும் தடையில்லை.அவருக்கென்றே மூத்தமகன் அமைத்துக் கொடுத்த கொம்மோட், இதமான பஞ்சணை மெத்தைப் படுக்கை, வாசிக்கப் பத்திரிகைகள், புத்தகங்கள் ஒன்றுக்கும் குறைவைக்கவில்லை.

ஆனால்........

என்னோடு சேர்ந்து சிரிக்கச் சில பேர் இருக்கினம் என்க்காக அழவும் ஒண்டிரண்டுபேர் இன்னமும் இருக்கினம். ஆனால் என்னோடை அழ, என்ர துக்கத்திலை பங்கு கொள்ள ஆர் இருக்கினம்? இருந்தவள்தான் போயிட்டாளே!"

கிழவிக்கும் இடையே ஏற்பட்ட மண உறவு ஆரம்பத தில் அவ வளவு திருப்தியான தாய் இருக்க வில்லை என்பது உண்மையே. அது நுனிக் கரும்பைச் சுவைத்த கதையாகவே இருந்தது.



கிழவி குமரியாய்க் கட்டுடலோடு கூடி அவரது தலையணையிலே தலை சாய்க்க உரித்துப்பெற்று வந்தபொழுது அவளை இரசிக்க அவரால் கூடவில்லை.

பொதுநிறம் என்றாலும் பறவாயில்லை. அட்டைக்கரி! ஆசிரியரும் 4 பேர் மதிக்கும் அறிவாற்றல்கள் பொருந்தியவருமான தமக்கு 6ஆம் வகுப்பையே தாண்டாத ஒருத்தி மனைவியானது கவலையோடு அவளில் வெறுப்பை அளித்ததும் உண்மைதான்.

நாவல்கள், சிறுகதைகள், கவிதைகள் என்று சிறுவயதிலிருந்தே விழுந்து விழுந்து வாசித்து அந்த வாசனைமூலம தாம் கட்டி யெழுபபிய கனவு மாளிகையில் சகவாசியாக அமர்பவள் பற்றி அவர் எதிர்பார்த்தவையெல்லாம் உடைந்து சிதறிப் போவதை அவரால் சகித்துக் கொள்ள முடியாதிருந்தது. என்னவோ வாஸ்தவம் தான்.

ஆனால்...

★ ★ ★

கிழவரின் இளமைக்காலம் மகிழ்ச்சியும் நிறைவும் கொண்டதாய் அமைவதற்குவேண்டிய வசதிகளோ வளங்களோ கொட்டிக் கிடக்கவில்லை. அவரின் மழலை மாற முன்னரே தகப்பனைத் தின்னியாகி, வறுமைக் கோட்டின் கீழ் இருந்த தாயின் வியர்வையும் பாடுகளுமே அவரை வளர்த்தன. அலாவுதீனின் அற்புத விளக்கைத் தேய்த்து மாடமாளிகையில் வாழவோ, பஞ்சபட்ச பரமான்னியம் உண்ணவோ, பட்டுப் பீதாம்பரங்கள் பொன்மணிக்கலன்களை அணியவோ கூடிய அதிருஷ்டமும் எட்டாக்கனியாகவே இருந்தது.

வாழ்க்கை என்ற சறுக்கு மரத்தில் ஏறி அடிக்கடி நழுவிக் கீழே வந்து எப்படியோ ஒரு தமிழாசிரியராய் அவர் ஆவதற்கு அவருடைய தாயின் தூண்டுதலும் இறைநேர்த்திகளுமே அவருக்குப் பக்கபலமாயிருந்தன.

அந்தக்காலத்துத் தமிழ்வாத்தியின் கலியாணச்சந்கை மகிப்ப சிறியதொரு காணித்துண்டு, குச்சு வீடு, சில நகைகள், ஒன்றோ இரண்டோ ஆயிரம் சீதனம் என்ற அளவிலேயே இருந்ததால் அந்த அளவுக்குள் அவருக்குக் கிட்டிய மணவாட்டி, அவரின் கனவுகளின் அளவுக்கு உயர்ந்திருக்காதது வியப்பிற்குரியதல்ல.

தந்தையை இழந்து தாயுடனும் தம்மிலும் பல வயது மூத்த அண்ணருடனும் அவருடைய மனைவியாகிய அண்ணியுடனும் வாழ்ந்து, தாயினதும் மலடரான அண்ணர் அண்ணியின் அளவு கடந்த செல்லத்திலும் வளர்ந்து எல்லாவற்றிற்கும் இந்த மூவரிலுமே தங்கியிருந்து உலக அனுபவமே இல்லாதிருந்த அவருக்கு வாய்த்தவள்....?

அவளுக்குக் கொடுத்த சீதனக காசு இரண்டாயிரமும் அவர் ஆசிரியப் பயிற்சி பெற்று முடிப்பதற்கென்று பெற்ற கடனுக்குத் தாரைவார்க்கப்பட்டது.

போதாததற்கு அவளின் தகப்பன் வாங்கிக்கொடுத்த புதிய தையல் மெஷினையும் அண்ணன் அண்ணியின் தூண்டுதலால் விற்பதற்கும் அவர் முனைந்தார். காரணம் மலிவாக வந்த காணி ஒன்றைத் தம்பிக்கு வாங்கி அதில் அவனுடைய சம்பாத்தியத்தில் ஒரு வீட்டையும் கட்டிக் கொடுக்க வேண்டும் என்ற நல்ல எண்ணந்தான்.

அனால், அந்தக்காணி மைனர் காணி என்றும் கொள்வனவு செய்வது பாதுகாப்பு இல்லை என்றும், திருமணமாகி ஓரிரு மாதம்களிலேயே தங்கள் மகளையும் தங்களையும் ஏமாற்றித் தங்களின் சீதனக் காணியையும் காலப்போக்கில் சூறையாடிவிடுவார்கள் என்றும் அவரின் மாமன் மாமிக்கு அச்சம் ஏற்பட்டதில் நியாயம் இருக்கவே செய்தது.

அவர்கள் பொலிஸுக்கு முறைப்பாடு கொடுத்து மகளையும் மருமகனையும் பொலிஸ் நிலையத்திற்கு அழைப்பித்தார்கள்.

பொலிஸ் ஐயா,மருமகனுஞ் சரி, அவற்றை அண்ணன் அண்ணியும் சரி சரியான பிடுங்கிகள நாங்கள் குடுத்த சீதனக் காசை மருமகன் படிச்ச செலவுக்குக்கெண்டு எடுத்துக்கொண்டினம். நாங்கள் ஆசையாய்க் கொடுத்த தையல் மெசினையும் விக்கப்பாக்கினம். அதைக் கொண்டு மைனர் காணியொன்றை வாங்கப்போவதாக பம்மாத்துப் பண்ணினம். நாங்கள் குடுத்த சீதனக் காணியில வீடு கட்டலாம் தானே? ஆனால், அங்க மருமகன் வந்திருக்க மாட்டாராமா? வந்திருக்க இவையும் விடமாட்டினை. இவையின்ர கைப்பாவைதான் மருமகன். ஆனபடியால்.... 'என்று மூச்சுவிடாமல் அவரது மாமி பேசியதன் மிகுதியைத் தொடரவிடாது பொலிஸ் அதிகாரி கேட்டார் 'ஆனபடியால் என்ன செய்யச் சொல்லுறியள்?'

"போனது போகட்டும் எங்கடை மகளை எங்களோட அனுப்பிவைச்சாப் போதும். இனி அவள் உவரோடை வாழவேண்டாம் என்று தகப்பன் தாய்க்குப் பக்கப்பாட்டுப் பாடினார்.

பொலிஸ் அதிகாரி அமைதியாக 'இங்க பாருங்கோ உங்கட மகள் மேஜர் சட்டப்ப்டி பதிவுத்திருமணமும், சமயாசாரத் திருமணமும் செய்து கொண்டவ. அவவிரும்பிக் கோட்டிலை முறையிட்டு வழக்கு நடத்தினால் உங்கட மகளுக்கு விவாகரத்துக் கிடைக்கும். நாங்கள் கட்டளையிட்டு அவவை உங்களோடை அனுப்பமுடியாது என்றார்.

'எதுக்கும் எங்கட மகளைக் கேளுங்கோ ஒருக்கால்' என்று மாமி சொல்ல, அவவின் அறியாமைக்கு மனத்துள் சிரித்தபடி அந்தப் பொலிஸ் அதிகாரி கேட்டார்' பிள்ளை உம்முடைய முடிவென்ன? உம்முடைய புருஷனை விட்டுட்டு அம்மா அப்பாவோட போக உமக்குச் சம்மதமோ?'

கிழவர்-அந்நாள் இளைஞர்-அதிர்ச்சியோடும் ஆவலோடும் மனைவியைப் பார்த்தார். வாய் பேசாத அவரின் மௌனம் சில கணங்கள் பயங்கரமாக நீடித்தது.

அந்தக் கணங்கள் கழிய அவரின் மனைவி சொன்னாள் 'உவர் என்ன சொல்கிறாரோ அதன்படி செய்யுறன்' மாமியும் மாமனும் உரத்த குரல் எடுத்துப் புலம்ப, பொலிஸ அதிகாரி அவர்களை அதடடி அடக்க தொடர்ந்து எந்த அசமபாவிதமும் இன்றி அவர் தனது மனைவயை அழைத்துக் கொண்டு காரில் வீடுதிரும்பினார்.

கன்னங்கரிய, படிப்பறிவற்ற தம் மனைவியை எவ்வளவு வெறுத்தாரோ அந்த அளவுக்கு அன்றிலிருந்து அவளை அன்புத் தேவதையாக தமது காரியம் யாவிலும் கைகொடுக்கும் சகதர்மினியாக அவர் ஏற்றுக்கொண்டார். தம் உள்ளததில் ஆவாகனம் செய்து கொணடார்.

கரிய அவளின் முகத்தில் ஒளிவிட்டவண்ணம் மூக்கினை அலங்கரித்த சிமிக்கியோடு அவளைப் பார்க்கும் பொழுதெல்லாம் சாட்சாத் பரமேஸ்வரியாகவே அவள் அவருக்குத் தரிசனம் கொடுத்தாள்.

திருமணமாகி ஓரிரு மாதங்களிலே ஒருவரையொருவர் சரியாகப் புரிந்து கொள்ளமுன்பே, தன் கணவரின் சுபாவங்களைச் சரிவர அறிந்துகொள்ள முன்னரே, 'உவர் என்ன சொல்லுவாரோ அதன்படி செய்யிறன்' என்று அவள் சொன்னாளே! அந்த வாக்கியத்திறகு இத்தனை மகத்துவமா? அந்தச் சம்பவத்தை இப்பொழுது நினைத்தாலும் கிழவரின் மெய் சிலிர்க்கின்றது. உரோமாஞ்சலி உண்டாகின்றது. மனைவியின் படத்தை நோக்கி அவரை அறியாமலே அவரின் கைகள் குவிகின்றன.

★ ★ ★

உவர் என்ன சொல்கிறாரோ அதன் படி செய்யிறன் என்ற வாக்கு கடைசிவரை கிழவியால் வார்த்தைக்கு வார்த்தை கடைப்பிடிக்கப் பட்டதையெல்லாம் அவர் நினைத்துப் பார்க்கிறார்.

கிழவரின் வாழ்க்கையிலே எத்தனையோ சோதனைகள், வேதனைகள், இழப்புக்கள், இறக்கங்கள் என்று ஏற்பட்ட வேளையில் எல்லாம் அவற்றின் பங்காளியாக மட்டும் கிழவி இருக்கவில்லை. அவற்றை தன் தலையிலே சுமக்கும் சுமைதாங்கியாக மாறி அவருக்கு அவள் அளித்த ஆறுதலும் நிம்மதியும் கொஞ்சமா?

இளமையின் துடிப்பும் குருதி ஓட்ட வேகமும் நிறைந்து அவற்றின வடிகாலாக அவளைக் கொணடு எட்டுப் பள்ளைகளைப் பெற்றுத் தள்ளினாரே.

ஆட்டங்கள், பாட்டங்கள் என்று சக ஆசிரியர்கள், நண்பர்களோடு வீட்டுப் பொறுப்பைச் சற்றும் கவனத்தில் கொள்ளாது அவர் திரிந்த காலத்தில் அத்தனையையும் தனித்துச் சுமந்து பிள்ளைகளை நல்லவர்களாக வல்லவர்களாக வளர்த் தெடுத்தவள் அந்தக் கிழவிதான். நண்டுஞ் சிண்டுமாக ஒருவருட இருவருட இடைவெளிகளில் பிறந்தவர்கள் அவர்கள்.

'எங்கள் எட்டுப் பேருக்கும் அப்பாவுககும் காலைப் பலகாரம் செய்து உண்ணவைதது எங்களுக்கு உடை யணிந்து அங்கும் இங்கும் சிதறிக் கிடக்கும் புத்தகங்கள், கொப்பி களை எடுத்துத் தந்து அம்மா பாடசாலைக்கு அனுப்பினா. அப்பா கதவைப் பூட்டிக்கொண்டு வெளிவாரிப் பட்டப் படிப்பில் மூழ்கி இருக்கையில், எங்களின் துடுக்கடைக்கி அ, ஆ படிபித்த முதல் ஆசிரியை அம்மாதான் என்று கிழவரின மூத்த மகன் நிர்மலன் குரல் தளதளக்கச் சொல்லி அழுதபோது கிழவரின் மனச்சாட்சி உறுத்த கழிவிரக்கம் அவரை ஆட்கொண்டதை அவர் நினைத்துக் கொள்கிறார்.

'கலியாணம் முடித்துப்போனவையும், கலியாணம் முடிக்க இருக்கிறவையும் அம்மா அப்பாவுக்கு எத்தனை பிரச்சினை கொடுத்திருப்பினம். அப்பா அவையின்ர சுயநலக் கொடுமைகளைத் தாங்காமல் எரிமலையால் வெடித்துக் கிளம்புவார். அந்த வேளைகளில் எல்லாம் அவரை அதட்டி அடக்கி சுயநிலைக்குக் கொண்டுவந்தவா அம்மா என்று கடைக்குட்டி புலம்புகையில் அவரின் நெஞ்சைக் கிழித்துக்கொண்டு பெருமூச்சுக் கிளம்பி அவரையே விழுங்கி விடும் உணர்வை அவர் அடைகின்றார்.

'அம்மா சிக்கனத்திற்கு பெயர் போனவா. அப்பா அவவுக்கு அடிக்கடி உடுபுடவை எடுத்துக் கொடுத்த வரலாறே இல்லை. மாறாக பெருகிவரும் குடும்பத் தேவைகளைச் சரிக்கட்ட அவர் கொண்டுவந்த நகை நட்டை விற்றுத் தொலைத்தவர் அப்பா. அம்மா ஒரு சொல்லும் அப்பாவை மனம் நோகச் சொன்னதில்லை.என்று விம்மித் தவிக்கிறாள் மூன்றாவது மகள் சுமதி. அவளின் சொற்கள் அவரை வாட்டி வதைக்கின்றன.

'கலியாணம் கார்த்திகை எண்டு போக நேர்ந்தாலும், சாதாரண பருத்திபபுடவையிலை கூட அவ போயிருக்கிறா அண்ணையை வெளிநாட்டுக்கு அனுப்ப தனது தாலிக் கொடியை விற்றுக் கொடுத்து விட்டு கிலித்தாலிக் கொடியை வாங்கிப் போட்டவா எங்கட அம்மா' என்று இரண்டாம் மகன் கமலன் சொன்ன பொழுது அவர் விம்மிப் பொருமி வெடித்தே விடுகிறார்.

இவ்வாறெல்லாம் சொல்லிச் சொல்லி கடைசியில் மன ஆறுதல் அடைந்த மக்கள் இப்பொழுது அவை பற்றி நினைப்பது கூட இல்லை. தங்கள் குடும்பம் தங்கள் பிள்ளைகள் பறப்பை பார்ப்பதற்கே அவர்களுக்கு நேரம்போதவில்லை. இந்த நிலையில் அம்மாவை நினைக்க நேரமெங்கே? அதற்காக அவர்களைக் குறைகூறிப் பயனில்லை.

ஆனால்... கிழவரால் அது முடிந்த காரியமா? அவர் கிழவியின் படத்தை நெடிது நோக்கி நிற்கின்றார். 'அம்மா என்னாலை இன்னும் கனநாளைக்கு இந்த உலகத்திலை இருக்க முடியாது. என்னை விரைவிலை உன்னட்டை அழைத்துக்கொள்'. ★

## கூட்டம்

தந்தை செல்வா நினைவு அறங்காவல் குழுவின் கூட்டம் இன்று மு.ப.10.00 மணிக்கு மாட்டீன் வீதியில் அமைந்துள்ள அலுவலகத்தில் குழுத் தலைவர் கலாநிதி பேராயர் ஜெபநேசன் தலைமையில் இடம்பெறவுள்ளது. (உ-16)

## வாராந்த நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

சந்நிதியான் ஆச்சிரமச் சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால் நடாத்தப்பட்டுவரும் வாராந்த நிகழ்வில் இன்று வெள்ளிக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு தம்பு சற்குருநாதனின் வயலின் இசை பக்கவாத்தியங்கள் சகிதம் இடம்பெறவுள்ளது. (உ-18)

# பன்னாட்டுப் படைகள் பாதுகாப்பு ஆயுதங்களை ஒப்படைக்குமாறு ஹெயிட்டி கிளர்ச்சிக்குழுவுக்கு உத்தரவு

(கராரே)

ஹெயிட்டி மக்களின் பாதுகாப்புக்கு பன்னாட்டுப் படைகள் உத்தரவாதம் அளித்திருப்பதால், ஆயுதங்களை விடுவித்துக் கொள்ளுமாறு அந்நாட்டின் கிளர்ச்சிக்குழுத் தலைவர் கை பிலிப்பி உத்தர விடடுள்ளார்.

இதனிடையே அமெரிக்கக் கடல் படையினர் தலைநகர் போட்ஸ்ஒஸ்பெயினை கவச வாகனங்களுடன் சென்று அடைந்தனர். ஆனால் முன்னாள் அதிபர் அரிஸ்ரைட்டின் ஆதரவாளர்களுக்கும் அதிபர் மாளிகை பொலிஸ்காரர்களுக்குமிடையிலான சண்டையில் அமெரிக்கப்படையினர் தலையிடவில்லை .

ஹெய்டியின் அமைதிப் பணியில் தாம பங்கேற்கப் போவதில்லை என்று கரீபியன் சமூகத்தினர் அறிவித்துள்ளார்கள்.

அரிஸ்ரைட் அதிபர் பதவியில் இருந்து அகற்றப்பட்டது குறித்து சர்வதேச விசாரணை நடத்து மாறும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஜமைக்காவில் நடைபெற்ற அவசரக் கூட்டமொன்றில் பேசிய 15 நாடுகள் அடங்கிய கரீபியன் குழுவின் தலைவர்கள் அமெரிக்க நடவடிக்கையை வன்மையாகக் கண்டனம் செய்தனர்.

ஹெயிட்டி விவகாரத்தை , அமெரிக்கா கையாண்ட விதத்தை அமெரிக்க நாடாளுமன்ற ஜனநாயக கட்சி உறுப்பினர்கள் கடுமையாக தாக்கிப் பேசியுள்ளனர்.

ஐக்கிய நாடுகள் ஆதரவின் கீழ் பன்னாட்டுப் படையின் ஒரு பகுதியாக ஹெயிட்டியில் ஆயிரம் அமெரிகப் படைவீரர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். (து-9)

## மலேசியப் பிரதமரின் செல்வாக்கை வெளிப்படுத்தப் போகும் பொதுத் தேர்தல்

(கோலாலம்பூர்)

மலேசிய தேர்தல் ஆணைக்குழு பொதுத் தேர்தலுக்கான திகதிகளை இன்று அறிவிக்கவுள்ளது.

அந்நாட்டின் பிரதமர் அப்துல்லா அஹமட்பதாரி பாராளுமன்றத்தின் பதவிக்காலம் முடிவடைவதற்கு முன் கலைத்திருந்தார். மலேசியாவின் அரசியலமைப்புச் சட்டத்தின் படி, சட்ட சபை கலைக்கப்பட்டு 60 நாட்களுக்குள் தேர்தல் நடைபெற வேண்டும்.

ஆளும் கட்சியின் பதவிக்காலம் எதிர்வரும நவம்பர் மாதத்தில் முடிவடைகிறது. ஆனால் மஹதீர் மொஹமட்டிடம் இருந்து 4 மாதங்களுக்கு முன்னர் பிரதமர் பதவியை ஏற்ற பதாரி அதனை நேற்று முன்தினம் கலைத்திருந்தார். திகதி குறிக்கப்படாத பொதுத் தேர்தல் மக்கள் மத்தியில் அவருக்கிருக்கும் செல்வாக்கை வெளிப்படுத்துவதற்கான களமாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது. (து-9)

## பலஸ்தீனருக்கு எதிராக நடவடிக்கை

பலஸ்தீனப் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள சட்ட விரோதக் குடியோற்றங்களை அகறறும் திட்டத்திற்கு அமெரிக்கா வின் ஆதரவைக்கோரி நிற்கும் இஸ்ரேல், பலஸ் தீன் போராளி களுக்கு எதிராக கடும்போக்கை மேற்கொள்வதறகுத் திட்டமிட் டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (து)

## காஸாப் பள்ளத்தாக்கில் ஆறு யூதக் குடியிருப்புகளிலிருந்து யூதர்களை வெளியேற இஸ்ரேல் அரசு உத்தரவு

(ஜெருசலேம்)

மேற்குக் கரையிலுள்ள காஸாப் பள்ளத்தாக்கிலுள்ள ஆறு யூதக் குடியிருப்புக்களிலிருந்து குறித்த காலக்கெடுவுக்கு முன்னர் வெளியேறுமாறு இஸ்ரேலிய அரசாங்கம் குடியிருப்பாளர்களை எச்சரித்துள்ளது.

பிரதமர் ஏரியல் ஷெரோன் அமெரிக்காவுக்கு மேற்கொள்ளவிருக்கும் விஜயத்துக்கு முன்னர் மேற்கொள்ளப்படும் எச்சரிக்கை நடவடிக்கை இதுவாகும் என அரசியல் அவதானிகள் கூறுகிறார்கள்.

அமெரிக்கத் தலைமையிலான மத்திய கிழக்கு சமாதானத் திட்டம் தோல்வியடையும் பட்சத்தில் காஸாப் பள்ளத்தாக்கில் அனைத்து யூதக் குடியிருப்புக்களையும் அப்புறப்படுத்துவது ஷெரோனின் திட்டமாகும்.

இதுபற்றி இஸ்ரேல் பிரதமருடன் பேசுவதறகு அடுத்த வாரம் அமெரிக்க இராஜதந்திரிகள் இருவர் இஸ்ரேல் செல்லவிருக்கிறார்கள். (து-9)

# நேட்டோ அமைப்பிலிருந்து பல நாடுகள் நீக்கப்படவுள்ளது

(மொஸ்கோ)

முன்னாள் சோவியத் குடியரசின முக்கய பல நாடுகள் நேட்டோ அமைப்பில் இணைந்து கொள்ளவுள்ளன.

எதிர்வரும் மார்ச்மாதம் 30 ஆம் திகதி நடத்தத் தீர்மானிக்கப்பட்டள்ள நேட்டோ அமைப்பின் பொது மாநாட்டின் போது ரஷ்யா உத்தியோகபூர்வ அங்கத்துவத்தைப் பெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

நேட்டோவில் அங்கம் வகிக்கும் பாதுகாப்புக் குழுவில் ரஷ்யாவை இணைத்துக் கொள்ள வேண்டும் என ரஷ்யப் பிரதமர் ஈகோர் இவானோவ் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

இதேவேளை பொது மாநாட்டுக்கு முன்னதாக நேட்டோ அமைப்பில் அங்கம் வகிக்கும் முக்கிய நாடுகளான பல்கேரியா, எஸ்லோனியா, லத்வியா, லிதுவேனியா, ரோமோனியா, ஸ்சுலோவாக்கியா, ஸ்சுலோவேனியா ஆகிய நாடுகள் அதிலிருந்து நீக்கப்படும். (து-9)

# காஸாப் பகுதியில் நிலவும் பதற்றம் அச்சத்தை நீக்க அமெரிக்கா முயற்சி

(வாஷிங்டன)

அமெரிக்கா தனது இரண்டாவது தூதுக்குழுவை இம்மாத இறுதிக்குள் இஸ்ரேல் பிரதமர் ஏரியல் ஷெரோனுடன் பேச்சுவார்த்தை நடத்த அனுப்பவுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ்ஷின் தேசியப் பாதுகாப்பு உதவி ஆலோசகர் இக்குழுவுக்குத் தலைமை தாங்கவுள்ளார்.

பலஸ்தீனத்தில் பலஸ்தீனர்களுக்கும் இஸ்ரேலியர்களுக்கும் இடையிலான இணக்கப்பாடு ஒன்றை ஏற்படுத்துவதற்கு நடைபெற்ற முதற்கட்டப் பேச்சுவார்த்தைகள் தோல்வியடைய்ந்தன.

எனினும் மேற்குக்கரை காஸாப் பகுதியில் தொர்டர்ந்து நிலவிவரும் பதற்றம், அச்சம் நிறைந்த சூழ்நிலைகளில் இருந்து அந்நாட்டு மக்களைப் பாதுகாக்கும் நோக்குடனேயே இந்தப் பேச்சுவார்த்தை நடைபெறவுள்ளது.

2 மில்லியன் பலஸ்தீனர்கள் வாழும் காஸா மேற்குகரைப் பகுதியில் 1967 ஆம் ஆண்டுகளில் இருந்து தொடர்ச்சியாக நடைபெறறுவரும் தீவிரவாத நடவடிக்கையின் காரணமாக இதுவரை 2 இலட்சத்துக்கும் அதிகமானோர் அகதிகளாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (து-9)

# ஜகார்த்தாவில் தங்கச் சுரங்க தீவிபத்தில் சிக்கி 13 பேர் பலி; 90 பேர் காயம்

(ஜகார்த்தா)

இந்தோனேஷியாவின் தங்கச்சுரங்கம் ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தை யடுத்து சுரங்கத்தினுள் இருந்தவர்களில் 13 பேர் கொல்லப்பட்டிருப்பதாகவும் பலர் காயமடைந்திருப்பதாகவும் அறிவிக்கப்படுகிறது.

இவர்கள் சட்டவிரோதமாகத் தங்கத்தை அகழ்வதற்கு சென்றவர்களென ஜகார்த்தாவில் இருந்து வெளியாகும் செய்திகள் தெரிவிக்கின்றன.

திருட்டுத தனமாகச் சுரங்கத்துக்குள் பிரவேசித்தவர்களை வெளியேற்றுவதறகாக சுரங்கத்தின் அடிப்பாகத்தில் ரயாகள் கொளுத்தப்பட்டன.

இது பெரும் தீ விபத்தாக மாறி 13 பேரைப் பலிகொண்டிருக்கிறது. சுரங்கத்தில் மேலும் 90 பேர் வரை சிக்கியிருக்கக் கூடுமென அஞ்சப்படுகிறது. (து-9)

## எயிட்ஸ் நோயாளர் மருத்துவ வசதிக்கான நிதியத்துக்கு உதவ செல்வந்த நாடுகள் தயக்கம்

(நியூயோர்க்)

எயிட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டவாகளுக்கு மருத்துவ வசதியளிப்பதறகான நிதியமொன்றைத் தொடங்கும் விடயத்தில் போதிய நிதியுதவியை வழங்குவதற்கு செல்வந்த நாடுகள் தயக்கம் காட்டுவதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

குறித்த நிதியத்துக்கு இதுவரை ஒரு சதம் கூடக் கிடைக்கவில்லை என்று உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

எச்.ஐ.வி தொற்றிய 30 இலட்சம் வறிய மக்களுக்கு 2005 ஆம் ஆண்டளவில் மருத்துவ வசதிகளை வழங்கும் திட்டம் பற்றி உலக சுகாதார ஸ்தாபனம் அறிவித்துள்ளது.

இத்திட்டம் அமுலாவதற்கு இவ்வாண்டு மாத்திரம் 20 கோடி டொலர்கள் தேவைப்படும் எனக் கூறப்படுகிறது. (து-9)



ஜனநாயக கட்சி சார்பில் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ஜோர்ஜ் புஷ்ஷை எதிர்த்து போட்டியிடுவதற்காக செனட்டர் ஜோன் கெரி (இடமிருந்து 2வது) தெரிவாகியுள்ளார் இவரது மகள் வெனஸா (இடது), ஒன்று விட்ட மகன் கிறிஸ் மற்றும் மனைவி தெராஸா ஆகியோர் கெரியுடன் மகிழ்ச்சியை பரிமாறிக்கொள்கிறார்கள்.

## கோபி அனான்-பிரிட்டிஷ் தூதர் பேச்சு

(நியூயோர்க்)

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் கோபி அனான் பிரித்தானியாவின் தூதுவரை நேற்று சந்தித்துப் பேசினார்.

ஈராக்கில் பிரித்தானியத் துருப்புக்கள் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கைகளின் காரணமாக ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புக் குழுவுக்குப் பங்கம் ஏற்படடுள்ளமை குறித்து நேறறைய சந்திப பின போது ஆராயப்பட்டது.

அண்மையில பிரித்தானிய தூதுவருடன் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தையின் போது எவ்விதமான முன்னேற்றமும் ஏற்டாத நிலையிலேயே இது தொடர்பாக பொதுச் செயலாளர் பேசவுள்ளார்.

இப் பேச்சு வார்த்தைகளின போது ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் கோபி அனானின் தொலைபேசி அழைப்புக்களை பிரித்தானிய உளவுப் பிரிவினர் ஒட்டுக் கேட்டமை தொடர்பாகவும் ஆராய்வார்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (9)




ஹெயிட்டி ஜனாதிபதி அரிஸ்ரைட் நாட்டைவிட்டுத் தப்பியோடியுள்ள சூழ்நிலையில் தலைநகரில் அமைந்துள்ள சர்வதேச விமான நிலையத்தில் கனடா நாட்டு வீரர் ஒருவர் பாதுகாப்பு வழங்கியபோது.

நிலத்தியல்பால் நீர்திரிந் தற்றாகும் மாந்தர்க்கு
இனத்தியல்ப தாகும் அறிவு. -குறள்

வலம்புரி

## சுப்பிரமணிய சுவாமியும் அநுரா பண்டாரநாயக்காவும்

தமிழ்நாட்டு அரசியலில் சுப்பிரமணிய சுவாமி போல் இலங்கை அரசியலில் அநுரா பண்டார நாயக்கா விளங்குகிறார். எதை? எதற்காக? எந்தப் பக்கம்? கதைக்கிறேன் என்பதைப் புரிந்து கொள்ளாமல் கதைப்பதில் சுப்பிரமணிய சுவாமியும், அநுரா பண்டாரா நாயக்காவும் ஒத்த இயல்பை உடையவர்கள். இவர்கள் தாமும் குழம்பி, மக்களையும் குழப்பி விடுபவர்கள். இத்தகைய அரசியல்வாதிகள் உலக நாடுகளில் ஆங்காங்கே இருக்கவே செய்கிறார்கள். எனினும் இவர்களால் நாடு படும்பாடு சொல்லுந் தரமன்று.

ஓரிடத்தில் நிலைப்பத்தியாக இருக்க முடியாத இவர்களுக்கு சுயகௌரவம் என்பது மருந்திற்கும் கிடைக்கவே கிடையாது. அநுரா பண்டார நாயக்கா தனது சகோதரியை உதறித் தள்ளி விட்டு ஐக்கிய தேசியக் கட்சியுடன் சேர்ந்து கொண்டவர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் கூட்டங்களில் ஜனாதிபதி சந்திரிகாவை ஐ.தே.கட்சியின் உறுப்பினர்கள் கண்டபாட்டில் ஏசியபோதெல்லாம் அதனை ரசித்துக் கேட்டுக்கொண்டிருந்தவர். அவ்வாறெனில் அவரின் மனநிலை எத்தகையது என்பதை எவரும் எளிதில் புரிந்து கொள்ள முடியும்.

ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்துகொண்டு தனது குடும்ப கௌரவத்தையே விற்ற அநுராவைப் பார்த்து, இவர் பண்டாரநாயக்காவின் மகன் என்பதில் எனக்குச் சந்தேகம் இருக்கிறது என அவரின் மாமன் முறையான அனுருத்த ரத்வத்த கூறியதை நாட்டு மக்கள் நன்கு அறிவர்.

இவ்வாறாக ஐக்கிய தேசியக்கட்சியில் இணைந்து தனது சகோதரிக்கு எதிராக செயற்பட்ட அநுரா மீண்டும் தனது சகோதரியுடன் இணைந்து கொண்டார்.

அநுரா பண்டாரநாயக்கா ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்த காலத்தில், ஐக்கிய தேசியக் கட்சி தேர்தலில் வெற்றி பெறவேயில்லை. இதனால் ஆத்திரமுற்ற ஐ.தே.கட்சி உறுப்பினர் ஒருவர் அநுராவைக் கட்சியில் இருந்து வெளியேற்றினாலேயே ஐ.தே.கட்சி வெற்றி பெறுமெனக் கூறியிருந்தார். அவர் கூறியதுபோல ஐ.தே.கட்சயில் இருந்து அநுரா வெளியேறியதும் அக்கட்சி வெற்றிபெற்றது.

அதேபோல் அவர் பொதுஜன ஐக்கிய முன்னணியில் இணைந்து கொண்டதும் பொதுஜன ஐக்கிய முன்னணி தோல்வியைத் தழுவிக் கொண்டது. இவ்வாறாக அநுரா இருக்கின்ற இடம் தோல்வியின் இருப்பிடமாக மாறுகின்ற வேளையில், பொ.ஐ.முன்னணியில் இணைந்துகொண்டு ஜே.வி.பியுடன் கூட்டு வைக்க வேண்டும் என தனது சகோதரி சந்திரிகா குமாரதுங்காவுக்கு அழுத்தம் கொடுத்தார்.

தனது சகோதரி சந்திரிகாவின் கணவரான ஜயகுமார ரணதுங்காவைச் சுட்டுக் கொன்றவர்கள் ஜே.வி.பியினர் என்ற உறுதிப்பாடுகளின் மத்தியில் அவர்களுடன் கூட்டுச் சேருமாறு அழுத்தம் கொடுத்தவர் அநுரா எனில், அவரின் சுய நலப்போக்கின் உச்சத்தை அறிந்து கொள்வதில் பெரிதான தடைகள் இருக்க முடியாது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் சந்தர்ப்பம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்கு அரசியல் யாப்பு ரீதியாக இல்லாமல் போவதால், தனக்கே அந்தச் சந்தர்ப்பம் கிடைக்கும் எனக் கருதியே, ஜே.வி.பியுடன் கூட்டுச் சேர வேண்டும் என அநுரா வலியுறுத்தியிருந்தார். அதனை உறுதிப்படுத்தும் வகையில் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தான் பண்டார நாயக்காவின் இறுதி வாரிசாகப் போட்டியிடுவேன் என்று பகிரங்கமாகக் கூறியுள்ளார்.

ஜனாதிபதிப் பதவியில் கொண்டுள்ள ஆசை காரணமாக தனது சகோதரியின் தாலியைப் பறித்தவர்களுடனேயே கூட்டுச் சேர விரும்பிய அநுரா சில வேளைகளில் ஜனாதிபதியாக வந்தால் எதனை எப்படி எவ்வாறு செய்வார் என்பதைப் பொது மக்கள் எளிதில் புரிந்துகொள்வார்கள் .

எதுவாயினும் அரசியலில் நிரந்தர நட்புமில்லை, நிரந்தரப் பகையுமில்லை என்ற வாசகம் ஓர் கொள்கை இல்லாத அரசியல் வாதிகளுக்கே பொருந்துடையது.

# யாழ்.மாவட்டத்தில் தேர்தல்

# பிரசாரம் சூடு பிடிக்கிறது

(கல்வயல்)

எதிர்வரும் பொதுத் தேர்தலுக்கான பிரசாரம் தற்போது யாழ்.குடாநாட்டில் சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் இருந்து 8 கட்சிகளும் 2 சுயேட்சைக் குழுக்களும் இத் தேர்தலில் போட்டியிடுகின்ற போதிலும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு, ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி ஆகியனவே மக்கள் மத்தியில் நேரடியாகத் தமது பிசார நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளன.

வீ.ஆனந்தசங்கரி தலைமையில் போட்டியிடும் சுயேட்சைக்குழு ஒன்று பத்திரிகை விளம்பரங்கள் மற்றும் அறிக்கைகளூடாக பிரசார நடவடிக்கைகளை தொடங்கியுள்ளது.

இதேவேளை, தமிழீழ விடுதலைப் புலிகளின் பூரன ஆதரவுடன் தேர்தல் களத்தில் குதித்துள்ள தமிழ் தேசியக் கூட்டமைப்பு நேற்று முன்தினம் முதல் வீடு வீடாகச் சென்று தேர்தல் பிரசார நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகிறது.

அத்துடன், பெரும் எடுப்பிலான தேர்தல் பிரசாரக் கூட்டங்களும் தொகுதி வாரியாக இடம்பெற்றுவருகின்றன.

இது தவிர சட்டத்துக்குப் புறம்பாக சுவரொட்டிகளை ஒட்டுவோரை கைது செய்யும் நடவடிக்கையில்பொலிஸார் தீவிரமாக ஈடுபட்டுவருகின்றனர். (உ-04,36)

## சமாதான முயற்சிகள் மீண்டும் தொடர வழிசமைக்க வேண்டும் – சுவிஸ் கருத்து

(பேர்ளின்)

இலங்கையில் சமாதான முயற்சிகள் மீண்டும் மேற்கொள்ளப்பட வேண்டும் என சுவிஸ்லாந்து நாட்டு அரசாங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

சுவிஸ்லாந்தில் நாடாளுமன்றக் குழு இது தொடர்பான, சுவிஸ்லாந்து அரசாங்கத்தின் கரிசனையை வெளியிட்டுள்ளது.

20 வருடகாலமாக இடம்பெற்றுவந்த யுத்தத்தின் பின்னர் மனித உரிமைகள் காப்பு, அரசியல் மாற்றம் ஆகியவற்றுக்கு இலங்கையில் அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வந்ததாகக் குறிப்பிட்டுள்ள சுவிஸ் நாடாளுமன்றக் குழு எதிர்வரும் ஏப்ரல் 2 ஆம் திகதி நடைபெறவுள்ள தேர்தலின் பின்னரும் இந்த நிலை தொடர வேண்டும் என்று தாம் எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்துள்ளது.

சுவிஸ்லாந்து சமஷ்டி ஆட்சி முறைமையானது பல்வேறு இன, மத, கலாசார குழுக்களிடையே ஒருமைப்பாட்டைக் கொண்டுவந்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ள இந்தக் குழு, 2002 ஆம் ஆண்டு இந்த சமஷ்டி யோசனை இலங்கையின் இனப் பிரச்சினைக்கான தீர்வு யோசனையாக முன்வைக்கப்பட்டிருப்பதையும் சுட்டிக்காட்டியுள்ளது. (உ)

## தேர்தல் ஆணையர் வேட்பாளர் சந்திப்பு

### இன்று முதல் பிரதி வெள்ளிகளில்

(இராஜகிரிய)

தேர்தல் ஆணையாளருக்கும் கட்சிகளினுடைய வேட்பாளர்களுக்குமிடையேயான விசேட சந்திப்புக்கள் இன்று முதல இடம்பெறவுள்ளன.

பிரதி வெள்ளிதோறும் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 2 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ள இச்சந்திப்பு இன்று கொழும்பு இராஜகிரியவிலுள்ள தேர்தல் திணைக்களத்தில் ஆரம்பமாகவுள்ளது. இச்சந்திப்புக்களின்போது எதிாவரும் பொதுத் தேர்தலுக்கான தேர்தல் திணைக்களம் மேற்கொண்டுள்ள விசேடத்திட்டங்கள் தொடர்பாக தேர்தல் ஆணையாளர் ரி. திஸ்ஸநாயக்கவால் வேட்பாளர்களுக்கு விளக்கமளிக்கப்படவுள்ளது.

இதேவேளை, சகல மாவட்டங்களிலும் தேர்தலை நடத்துவதற்குரிய விசேட ஏற்பாடுகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களினால் மேற்கொள்ளப்பட்டுவரும் இந்நடவடிக்கைகளில் தபால்மூல வாக்களிப்பு, வாக்குச் சாவடி அமைப்பு, தேர்தல் கால ஊழியர்களை நியமித்தல் ஆகிய செயற்பாடுகளும் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (உ-60,04)

## ஆங்கில மொழிமூலக் கல்வி 575 பாடசாலைகளில் அமுல்

### கல்வி அமைச்சர் தகவல்

(கொழும்பு)

ஆங்கில மொழிமூலம் கல்வி போதிக்கும் நடவடிக்கைகளின் கீழ் இதுவரையில் 575 பாடசாலைகளில் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி பயின்று வருவதாக கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றிய அவர் மேலும் கூறுகையில்,

ஆங்கில மொழிமூலம் கல்வி பயிலுவது உலக அறிவைத் தேடிக்கொள்வதற்காகவே. சிங்களம் மற்றும் தமிழ் மொழி அறிவு மாத்திரம் மாணவர்களுக்குப் போதுமானதல்ல. ஆங்கில மொழி கற்பது இன்று அத்தியாவசியமானதாகவுள்ளது.

ஆங்கில மொழி மூலம் தற்போது பயிலும் மாணவர்கள் 2007 ஆம் ஆண்டில் கல்விப் பொதுத் தராதர சாதாரண பரீட்சைக்குத் தோற்றுவார்கள் என்று குறிப்பிட்டார் (உ-2)

### தினசரி தியானம்

ௐ

### விவேகச் சிந்தனைகள்

உன்னுடைய இலட்சியம் ஜடப் பொருள் என்றால் ஜடப் பொருளாகவே நீ ஆகிவிடுவாய். ஆன்மாவை அடைவதுதான் நம்முடைய இலட்சியம். உன்னால் ஒருவருக்கும் உதவி செய்ய முடியாது. மாறாக சேவை செய்யத்தான் உன்னால் முடியும்

சுவாமி விவேகானந்தர்.

## ஜாதிக ஹெல உறுமய பிக்குகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

(கொழும்பு)

கங்கொடவில சோமதேரரின் மரணத்திற்குப் பொறுப்பினை ஏற்கவேண்டும் என தனக்கெதிராக ஜாதிக ஹெல உறுமய பிக்குகள் குற்றஞ்சாட்டியமை தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கப்போவதாக சிலிங்கோ நிறுவனங்களின் தலைவர் தேசமானிய லலித் கொத்தலாவல தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் கூட்டிய பத்திரிகையாளர் மாநாட்டில் மேலும் கூறுகையில்,

பிககுகளின் தெளிவான உள்நோக்கத்தை அறியவேண்டும். அதன்பிறகே சட்டநடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதற்காக கடந்த பெப்ரவரி மாதம் 26 ஆம் திகதி நடைபெற்ற ஜாதிக ஹெல உறுமயவின் பிரசாரக் கூட்டத்திற்கு எனது அதிகாரிகளை வீடியோப் படம் பிடிக்க அனுப்பியிருந்தபோது அவர்கள் இனங்காணப்பட்டு, அவர்களின் வீடியோக் கருவிகள் பறிமுதல் செய்யப்பட்டதுடன், கோயிலினுள் அவர்கள் கட்டப்பட்டுத் தாக்கப்பட்டுள்ளனர்.

இது அவர்களின் அடிப்படை உரிமைகளை மீறும் செயல். இது சிங்கள பௌத்தர்களின் நடத்தை அல்ல.

மேலும், கடந்த சில தசாப்தங்களாக சிலிங்கோ நிறுவனம் 21 ஆயிரம் பொதுமக்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கியுள்ளது. இதில் 80 வீதமானவர்கள் சிங்கள பௌத்தர்கள். எனவே, சிங்கள பௌத்தர்களுக்கெதிராக நான் செயற்படுவதாக கூறுவது பொருத்தமற்றது எனத் தெரிவித்துள்ளார். (உ-06)

## தவக்கால சிந்தனை-10

நம்மிடமுள்ள சிறு சிறு குணங்கள், நற்செய்கைகள் மட்டில் நாம் திருப்திப்பட்டுக் கொள்கிறோம். "நான் இன்றைக்கு ஒரு ரூபாய் பிச்சை போட்டேன். " "நான் இன்று முழுவதும் உபவாசம்" என்று சிறுசிறு ஞானக் காரியங்களைச் செய்த திருப்தியில் இருந்துவிடுகிறோம். இவைகளைச் செய்தால் நாம் இறையருளைப் பெறலாம். எனவும் எண்ணுகிறோம். இதுபோன்றவைகளைத் தானே பரிசேயர்கள் செய்தார்கள். இவர்களது நெறி, மதிப்பீடுகளைவிட நமது மதிப்பீடு உயர்ந்ததாய் இருக்கவேண்டும் என இயேசு விரும்புகிறார். " நான யாரையும் பாதிக்கவில்லை. கொலை போன்ற பாவம் செய்ய வில்லை" என வாளா இருப்பதால் நம் ஞான வாழ்வு சிறந்து விடாது. எல்லோரிடமும் குறிப்பாக பகைவரிடம் நல்லுறவை ஏற்படுத்தி, உறவில் விரிசல் ஏற் படும்வேளை உடன்பாடு செய்து கொண்டு உரிய காணிக்கை மற்றும் ஒறுத்தல் செய்தல் அவை இறை பிரசன்னத்தில் உயர்வாகக் கருதப்படும். அடிப்படையில் மனிதருக்கெதிராக கோபப்படுவதும் " முட்டாள்" என ஏசுவதும் அதன்பின் அதே மனநிலையோடு ஆலயம் சென்று வழிபடுவதால் என்ன பயன்? நமது நெறி சிறந்ததாய் இருக்க மனிதரிடத்தில் நல்லுறவை வளர்ப்போம்.

காவலன்

உள்நாட்டு வெளிநாட்டு விமான ரிக்கட்களுக்கும் பார்சல் சேவைகளுக்கும்

MANOJ EXPRESS SERVICE

MANOJ EXPRESS
The Finest Express Service in the Field

இல.13, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

யாழ்.: 021 222 3916, 0777 801038
கொழும்பு: T.P.: 2390128, Fax: 2399650, Mob: 0777 517019


# அரசியல் யாப்பை மாற்றுவதாக கூறுவது பாரிய பின்விளைவை தரும்

## எச்சரிக்கிறார் அமைச்சர் பீரிஸ்

(நமது நிருபர்)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சி அமைத்தபின் தற்போதைய அரசியல் அமைப்பை மாற்றப்போவதாக அக் கட்சி கூறி வருவது எதிர்காலத்தில் பாரிய பின்விளைவுகளை ஏற்படுத்தும் என்று அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் எச்சரித்துள்ளார்.

அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் நேற்று நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டிலேயே மேற்கண்டவாறு எச்சரித்துள்ளார்.

அவ் ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகள் இல்லாமல் அரசியல் யாப்பை மாற்றமுடியுமானால் எந்தவொரு சூழ்நிலையிலும் அரசியல் ஸ்திரத் தன்மை ஏற்படமாட்டாது. குறுகிய அரசியல் இலாபத்தை நோக்கமாகக் கொண்டு எடுக்கப்படும் எந்த நடவடிக்கையிலும் அவர்கள் ஒருபோதும் வெற்றியடையமுடியாது.

எமது ஐக்கியதேசிய முன்னணி அரசின்மீது போலிக் குற்றச்சாட்டுக்களை சுமத்தி தங்களின் தேவைகளுக்கு ஏற்ற நிறுவனங்களைப் பொறுப்பேற்பதில் ஜனாதிபதி முனைப்புடன் செயற்பட்டு வருகின்றார்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வெற்றிபெற்றால், யார் பிரதமராக வருவார்கள் என்பது பற்றி அவர்கள் ஒன்றும் தெளிவுபடக் கூறவில்லை என்றும் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார். (ம)

## மருத்துவக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் வெள்ளி விழாவை ஒட்டி நடாத்தப்படும் பிரம்மாண்டமான மருத்துவக் கண்காட்சி இன்று வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு மருத்துவ பீடத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இந்நிகழ்வில் கொழும்பு பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீட பட்டப்பின் படிப்புகள் பணிப்பாளரான பேராசிரியர் திருமதி லலிதா மெண்டிஸ் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (உ-18)

## கண்காணிப்பு...

கிழக்கு மாகாணத்தின் தற்போதைய சூழ்நிலை தொடர்பாக எடுத்து விளக்கிய அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன், கிழக்கு மாகாண விசேட தளபதி ரமேஸ், கிழக்கு மாகாண அரசியல் துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் மற்றும் ஏனைய முக்கிய உறுப்பினர்கள் எமது தலைவருடனும், தலைமைப்பீடத்துடனும் விரிவான கலந்துரையாடல்களை மேற்கொண்டு வருகின்றனர். தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி தற்காலிகமானதென்றும் இதற்கான தீர்வு மிக விரைவில் ஏற்பட்டுவிடும் என்றும் அரசியல் துறைப் பொறுப்பாளர் தெரிவித்தார்.

இவ்வாறு புலிகளின் ஊடகப் பிரிவின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## ஐ.தே.மு...

திர முன்னணிக்கு வாக்களிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன் இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா நாட்டு மக்களைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

எம்பிலிப்பிட்டியாவில் நேற்று நடைபெற்ற பிரமாண்டமான தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் உரையாற்றும்போதே ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா உரையாற்றும்போது மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து பேசுகையில்,

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளுக்கு மாறாக விடுதலைப் புலிகளுடன இரகசிய ஏற்பாடுகளைச செய்து இரண்டுவருடகாலமாக மக்களை ஏமாற்றி வந்துள்ளது.

இந்நிலையில், ஒளிவுமறைவின்றி தெளிவான முறையில் சிந்தித்து தங்களது ஆணையை வெளிப்படுத்த தேர்தல் மூலம் சந்தர்ப்பம் அளிக்கப்பட்டுள்ளது. இம்முறை பொதுத் தேர்தலில் வாக்களிக்கும்போது மக்கள் தூரநோக்கோடு சிந்தித்து வாக்களிக்க வேண்டும்.

இன்றுள்ள சூழ்நிலையில், பாரிய அழிவில இருந்து யாரால் நாட்டைக் காப்பாற்ற முடியும் என்று மக்கள் சிந்திக்கவேண்டும்.

நாட்டின் மீதான பற்று, மக்கள் மீதான அக்கறை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு ஒளிமயமான நாட்டைக் கட்டியெழுபபுவதற்கு உண்மையான சமாதானததில் யார் அக்கறை கொண்டுள் ளார்கள் என்பதை இத்தேர்தல் மூலம் மக்கள் வெளிக்காட்டவேண்டும்.

யுத்தம் என்ற பேச்சுக்கு இடமின்றி சமாதானத்தை எவ்வழியிலாவது ஏற்படுத்துவதே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் குறிக் கோளாகும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார். (ம)

## கட்டுப்பாடற்ற...

அப்பட்டமாக மறுக்கப்பட்டதாகவே இருக்கும். தேர்தலுக்கு நீண்டகால அவகாசம் இல்லாமையால பிரதிநிதிகளான அரச அதிபர்கள் தேவையான ஒழுங்குகளை மேற்கொள்ள தங்களின் முடிவு மிகவும் முக்கியமானது.

யாழ். ஆயர் தோமஸ் சவுந்தர நாயகம் ஆண்டகையினால் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள கடிதத்தில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது.

வடக்கு, கிழக்கில் நடத்தவிருக்கின்ற பொதுத் தேர்தல் தொடர்பாக இம்மடலை எழுதுகிறேன். வன்முறையும் குழம்பமுமற்ற சுதந்திரமானதுமான நேர்மையானதுமான பொதுத் தேர்தலாக இத்தேர்தல் இருக்கவேண்டும் என்பதே எமது விருப்பமாகும். எல்லா மக்களும் தேர்தலில் பங்குபற்ற சந்தர்ப்பம் வழங்கப்படவேண்டும்.

அரச கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளில் இருக்கின்ற மக்கள் அவர்களின் தவறில்லாமல் நீண்ட காலமாகத் தேர்தலில் பங்குபற்றும வாய்ப்பை இழந்தவர்களாக இருக்கின்றார்கள்.

அரச நிறுவனங்களும், கச்சேரி போன்ற மற்றைய நிறுவனங்களும் இங்கு ஒழுங்காக இயங்குகின்றன. அரசாங்கப் பரீட்சைகளான க.பொ.த. (சா/த), க.பொ.த (உ/த) பரீட்சைகள் கல்வித் திணைக்களத்தினால் ஒழுங்காக நடத்தப்படுகின்றன. வாக்காளர்கள் தேர்தலில் பங்குபற்றித் தமது பிரதிநிதிகளை நாடாளுமன்றத்திற்குத் தெரிவு செய்யும் உரிமை மறுக்கப்பட முடியாத ஒரு உரிமையாகும்.

எனவே, அரசாங்கம் தனது முழு அதிகாரத்தைப் பயன்படுத்தி தமது வாக்களிக்கும் உரிமையை மக்கள பயன்படுத்த ஆவன செய்ய வேண்டும். பாதுகாப்புப் படையினர், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு ஆகியோரின் உதவியுடன் பொருத்தமான பொதுவான இடத்தில் வாக்களிப்பிற்கு வழிசெய்யலாம். ஓமந்தை, முகமாலை, உயிலங்குளம் (மன்னார்) பாதுகாப்புப் படையினர் தேர்தல் சாவடிகளை அமைத்துத் தேர்தலை நடத்துவதற்காகப் பின் நோக்கி நகர்த்தப்படலாம்.

இத்தீர்வு நடைமுறைப்படுத்த முடியாதாயின் இரு தரப்பினருக்கும் இடைப்பட்ட மனிதர்கள் இல்லாத பிரதேசம் முன்னுரிமை அடிப்படையில் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டு பொதுத்தேர்தலுக்கான வாக்குச் சாவடிகள் அமைக்க பயன்படுத்தப்படலாம் என்று குறிபிடப்பட்டுள்ளது. (உ)

## பிரதமர்...

நிறுத்தக் கண்காணிப் புக்குழுத் தலைவர் ரொன்ட் பியூரு ஹெலவ்டே ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதேவேளை, இவ்விடயம் தொடர்பாக அரசாங்கம் கருத்துக்கூறும் தேவை ஏற்படவில்லை என்றும், எனினும் சம்பவங்களை அரசு உன்னிப்பாகக் கவனித்து வருவதாகவும் அமைச்சர் பீரிஸ் தெரிவித்தார். (ம)

## ஐ.தே.முன்னணி...

ஆட்சிசெய்த ஐக்கியதேசிய முன்னணி அரசாங்கம் செல்வாக்கை அடிப்படையாகக் கொண்டு பல ஊழல் மோசடிகளைப் புரிந்து வந்தது.

இதனால, நாட்டின் பொருளாதார நிலைமை மிக மோசமாகியது. பல நிறுவனங்கள் இழுத்து மூடப்பட்டன. வெளிநாட்டு முதலீட்டாளர்களின் வருகை குறைந்துபோனது.

இந்நிலையை மாற்றுவதற்கு ஐக்கியதேசிய முன்னணி அரசாங்கம் மீண்டும் ஆட்சிக்கு வருவது தடுக்கப்படவேண்டும். வாக்குறுதிகளை அளித்து மக்களை ஏமாற்றிய இவ் அரசாங்கத்தை மக்கள் நிராகரிக்க வேண்டும் என்றார். (உ-60,4)

# நாயன்மார்க்கட்டு பகுதியில் மனித எலும்புக்கூடுகள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் செம்மணி நாயன்மார்க்கட்டு வீதிப் பகுதியில் மிதிவெடிகளை அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்த கலோ ரெஸ்ட் அமைப்பினர் மனித எலும்புக் கூடுகளை மீட்டுள்ளனர். மனித எலும்புக் கூடுகள் காணப்பட்டதையடுத்து அப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வந்த மிதிவெடிஅகற்றும் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

மேற்படி எலும்புக்கூடுகளுடன் பெண்கள் அணியும் உள்ளாடைகள் மற்றும் சீருடைகள் என்பன காணப்படுவதாகவும் தெரியவருகிறது.

இது விடயம் குறித்து கலோ ரெஸ்ட அமைப்பினரால் கோப்பாய் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் யாழ்.நீதிமன்ற நீதிபதி ஸ்ரீநிதி நந்தசேகரன் சம்பவ இடத்தை நேரில் சென்று பார்வையிட்டார். இதேவேளை அப்பகுதியில் மிதிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்த பணியாளர்களிடம் நேற்றுப் பொலிஸார் வாக்கு மூலம் பெற்றுள்ளனர். பொலிஸார் விசாரணைகளைத் தொடர்ந்து மேற்கொண்டுள்ளனர். (த-3)

# ஈ.பி.டி.பியினர் மீது நேற்று கல்முனையில் கிரனெட் தாக்குதல்

(மட்டக்களப்பு)

அம்பாறைக் கல்முனைப் பிரதேசத்தில் தேர்தல் பிரசார நடவடிக்கையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த ஈ.பி.டி.பியின் அம்பாறை மாவட்ட வேட்பாளர் மீது கிரனெட தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நேற்று நண்பகல் 12.45 மணியளவில் இடம்பெற்ற தாக்குதலில் வேட்பாளர் உட்பட நால்வர் காயமடைந்துள்ளனர்.

வான் ஒன்றில் தேர்தல்பிரசார நடவடிக்கையில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்கள் இத்தாக்குதலை மேற்கொண்டதாக கிழக்குப் பிராந்தியப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் நெவில் விஜயசிங்கா தெரிவித்தார்.

இத்தாக்குதலின்போது அம்பாறை மாவட்ட ஈ.பி.டி.பி. வேட்பாளரான துரைராசா லால் மற்றும் பொதுமக்களான முகமட் பாருக் ஏ.ஜி.எம்.நஜீம் ஆகியோரும் கடை உரிமையாளர் ஒருவரும் காயமடைந்தனர். இவர்கள் அம்பாறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ச)

# சைவசமய போட்டிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் மேற்கு, மணியர்பதி இந்து இளைஞர் மன்றம் நடாத்தும் சைவ சமய அறிவுப் போட்டிப்பரீட்சை நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை கொக்குவில் இந்துக்கல்லூரியில் நடைபெறும்.

கீழ்ப்பிரிவு, மத்திய பிரிவு மாணவர்க்கான பரீட்சை காலை 9 மணி முதல் 10 மணி வரையும், மேற்பிரிவு மாணவர்களுக்கான பரீட்சை முற்பகல் 11 மணிமுதல் ஒரு மணிவரையும் நடைபெறும். பரீட்சையில் தோன்றும் மாணவர்களுக்கான சுட்டிலக்கங்கள் அந்தந்தப் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும், சுட்டிலக்கம் கிடைக்கப் பெறாத மாணவர்கள் பரீட்சை மண்டபத்தில் அதனைப் பெற்றுக் கொள்ள முடியுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ந)


பாராட்டி வாழ்த்துகிறோம்



மண்டைதீவைச் சேர்ந்த
பாலசுப்பிரமணியம் பிரதீபன்
5ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் 130 புள்ளி பெற்றுள்ளார். இவரை பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்
அப்பா, அம்மா

(8424)



யாழ். மண்ணில் டாக்டர் திருமதி பிரபாரெட்டி



யாழ்.மண்ணில் முதன் முறையாக இந்தியாவின் பிரபல்யம் வாய்ந்த
Praba's Institute of Beauty Theraphy & Health Care Management

நிறுவனத்தின் இயக்குநராகிய டாக்டர் திருமதி பிரபாரெட்டி
(M.A.,M.S,MB.BS)(World Diploma in hair colouring in France), (Cinema Secrate in London)

அவர்களும் அவரது குழுவினரும் யாழ்ப்பாணம் வருகை தந்துள்ளார்கள்.

- இவர்கள் நடாத்த இருக்கும் அழகுக்கலை பற்றிய பயிற்சி நெறியினை தொடர ஏராளமான விண்ணப்பங்கள் குவிந்த வண்ணமுள்ளமையால் இவர்கள் 3 பிரிவுகளாக 7 நாள் பயிற்சி வகுப்புக்களை நடாத்தத் திட்டமிட்டுள்ளனர்.
- இப் பயிற்சி வகுப்பில் இணைய விரும்புவோர் 167, நவீன சந்தை உட்புறம் யாழ்ப்பாணம் - (யாழோசை விளம்பர சேவைக்) அருகில் உங்களுக்கான விண்ணப்பப் படிவத்தினைப் பூர்த்தி செய்து ரூபா 6000/= கட்டணமாகச் செலுத்தி உங்கள் முன்பதிவுகளை மேற்கொள்ளுங்கள்.

பயிற்சி வகுப்புக்கள் யாவும் நடைபெறும்
இடம் : Y.M.C.A கட்டடம் (கச்சேரிக்கு முன்பாக) இல.109, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.
காலம் : 06.03.2004 சனிக்கிழமை.
நேரம் : காலை 9.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணிவரை (மதிய போசனம் வழங்கப்படும்)

இப் பயிற்சி வகுப்பின் முடிவில் திருமதி பிரபாரெட்டி அவர்களால் பெறுமதிமிக்க சான்றிதழ் வழங்கப்படும். இவ் அரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்

உங்கள் மேலதிக தொடர்புகளுக்கு :- தொலைபேசி: 024-4-589743, 077-6070531 , 071-2346781.

(C/7377)


இப்பத்திரிகை வலம்புரி அச். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.03.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.